விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 27 திங்கட்கிழமை (11.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே


# ஐ.நா மனித உரிமைகள் சபையில் ராஜதந்திரமாக செயற்பட வேண்டும்

## விக்னேஸ்வரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை இலங்கை நிறைவேற்ற தவறியிருக்கும் நிலையில் இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும். அத்துடன் இலங்கை விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை விசேட பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் போன்ற வலியுறுத்தல்களை நடைமுறைக்கு கொண்டுவரும் வகையில் இங்குள்ள தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் தமது அரசியல் ராஜதந்திர செயற்பாடுகளை வகுத்து செயற்பட வேண்டுமென தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் வடக்கு முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



## பொது வேட்பாளர்? மைத்திரி - மகிந்த இடையில் முறுகல்

(கொழும்பு)

பொதுவேட்பாளர் இன்றி ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

24

## இந்திய நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது

(டில்லி)

இந்தியாவின் 2019 நாடாளுமன்றத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன்படி தமிழகம் மற்றும் புதுவையில் 40 தொகுதிக்கும் ஒரே கட்டமாக ஏப்ரல் 18ஆம் திகதி மக்களவை தேர்தல் நடைபெறும். (மு-3)

## மன்னார் மனிதப் புதைகுழி அரை நூற்றாண்டுக்கு உட்பட்டதே தடயவியல் நிபுணர் அதிர்ச்சி தகவல்

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழி அரை நூற்றாண்டுக்கு உட்பட்டதே என தடயவியல் நிபுணர் பேராசிரியர் செல்வ சுரேஷ் அதிர்ச்சி தகவல் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பான கார்பன் பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் அந்த புதைகுழி கி.பி.1400 - கி.பி.1650 வருட காலத்திற்குரியது என பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்

24

## இந்திய வியாபாரிகள் இருவர் யாழில் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

இந்திய வியாபாரிகள் இருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து, யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்திய தமிழகத்தைச் சேர்ந்த இருவர் சுற்றுலா விசாவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்த இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் தங்கமுலாம் பூசப்பட்ட கவரிங் நகைகளை விற்பனை செய்துள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், நேற்றுமுன்தினம்

23

# விண்ணாதி விண்ணர்கள் முடிந்தால் குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்லட்டும்



## ஜெனிவா விவகாரம் பற்றி சுமந்திரன் விளக்கம்!

(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனித உரிமைகள்பேரவையில் கொடுத்த உறுதிமொழிகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு இலங்கை தவறியுள்ளது. இது கண்டிக்கப்பட வேண்டியது. இலங்கை மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இலங்கை தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஆணையாளர் வெளிப்படுத்தியிருந்தார். அதனைச் சர்வதேசம் தொடர்ந்தும் மேற்பார்வை செய்ய வேண்டுமென த.தே.கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்

23

## விபத்துக்களில் சிக்கி நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாலை விபத்துக்களில் சிக்கி 3 மாணவர்கள் உட்பட நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளைக்குச் சென்று விட்டு உந்துருளியில் நேற்றுக்

24

## சப்ரகமுவ மாகாணத்திலிருந்து வடக்கிற்கு நீர் கொண்டுவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

சப்ரகமுவ மாகாணத்திலிருந்து வடக்கிற்கு நீரைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், சப்ரகமுவ மாகாணத்திலிருந்து நிலத்திற்கு அடியிலிருந்து குழாய் மூலம்

23



## எரிபொருளின் விலை கூடலாம்

(கொழும்பு)

எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய இன்று முதல் புதிய விலைப்பட்டியல் அறிவிக்கப்படவுள்ளது. அதன்படி இன்று முதல் எரிபொருளின் விலை மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

சர்வதேச சந்தையில் எரிபொருளுக்கு காணப்படும் விலையுடன் ஒப்பிட்டு அமுல்படுத்தப்படும் எரிபொருள் விலை, சூத்திரத்திற்கு அமைய இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் தற்போது உலக சந்தையில் எரிபொருள்

23

## புதிய சட்டத்தை ஏற்க முடியாது ஜே.வி.பியும் உறுதி

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். ஆனால் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூல யோசனையை ஏற்க முடியாது என மக்கள் விடு

24

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எந்த கட்சியும் ஆதரவளிக்கக் கூடாது!

## மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை

(மாத்தறை)

எந்தவொரு அரசியல் கட்சியும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கக் கூடாது என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கோரினார்.

24



# கட்டுத்துவக்கு வெடித்து இராணுவ வீரர்

## காயமடைந்தமைக்கு காரணமான சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்து இராணுவ வீரர் காயமடைந்தமை தொடர்பில் பூநகரிப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூநகரி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் நேற்று முன்தினம் காட்டுப்பகுதிக்கு சென்ற வேளை அங்கு பொருத்தி வைக்கப்பட்டுள்ள கட்டுத்துவக்கு வெடித்துள்ள நிலையில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பூநகரிப் பொலிஸார் பூநகரிப் பகுதியில் வேட்டைத் தொழிலில் ஈடுபடுகின்ற ஒருவரை சந்தேகத்தின் பேரில் நேற்றுக் கைது செய்துள்ளனர். (மு-3,10)

# சாறி சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்தார் மூதாட்டி

(யாழ்ப்பாணம்)

சாறி மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் அகப்பட்டதால் கீழே விழுந்த மூதாட்டி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று கொக்குவில் குளப்பிட்டிச்சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த 69 வயதுடைய பி.சிவலக்சுமி என்ற மூதாட்டியே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு-3.10)

## அறிவித்தல்

### கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழாவிற்கான வாகன தரிப்பிட நிலையங்களை வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2019

கரைச்சி நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவிற்கு பின்வரும் வாகன தரிப்பிட நிலையங்களுக்கான கேள்விகள் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றது.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|
| திகதி:- 2019.03.11ம் திகதி முதல் 2019.03.14ம் திகதி வரை<br>நேரம்:- மு.ப 10.30 மணி முதல் பி.ப 3.00 மணி வரை<br>இடம்:- கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் முரசுமோட்டை | திகதி:- 2019.03.15ம் திகதி வெள்ளிக்கிழமை<br>நேரம்:- மு.ப 10.00 மணி | திகதி:- 2019.03.15ம் திகதி வெள்ளிக்கிழமை<br>நேரம்:- மு.ப 10.30 மணி<br>இடம்:- கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் முரசுமோட்டை |

கேள்விப்பத்திரங்களை பொறுப்பதிகாரி, கரைச்சி பிரதேச சபை, உப அலுவலகம், முரசுமோட்டை என முகவரியிட்டு தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் என தெளிவாக குறிப்பிட்டு 2019.03.15ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

கேள்விகள் யாவும் 2019.03.15ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 .30 மணிக்கு கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் முரசுமோட்டையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும்

| இல | வகை | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்வி வைப்பு படிவ கட்டணம் NBT நீங்கலாக (மீளளிக்க முடியாதது) | வாகனம் ஒன்றிற்கான கட்டணம் | இழிவு கேள்வித் தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் (பாதுகாப்பு நிலையம்) | 10000.00 | 2000.00 | துவிச்சக்கர வண்டி ஒன்றிற்கு 20.00<br>மோட்டார சைக்கிள் ஒன்றிற்கு 50.00<br>HELMAT ஒன்றிற்கு 30.00 | 99000.00 |
| 02 | முச்சக்கரவண்டி (பாதுகாப்பு நிலையம்) | 5000.00 | 2000.00 | முச்சக்கரவண்டி ஒன்றிற்கு 100.00 | 11000.00 |
| 03 | கயேஸ், கார் (பாதுகாப்பு நிலையம்) | 5000.00 | 2000.00 | கயேஸ், கார் ஒன்றிற்கு 100.00 | 11000.00 |
| 04 | ஏனைய வாகனங்கள் (தரிப்பிட நிலையம்) | 5000.00 | 2000.00 | தனியார் பேருந்து ஒன்றிற்கு 100.00<br>ஏனைய வாகனங்கள் ஒன்றிற்கு 100.00 | 22000.00 |

நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
2. கேள்வித்தொகை முழுவதையும் 2019.03.15ம் திகதி செலுத்த வேண்டும். செலுத்தப்பட்ட குத்தகைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பத்றகோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்வி சபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்வி பத்திரம் பெற வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தை கிராம சேவையாளர் மூலம் "உண்மைப்பிரதி" என உறுதிப்படுத்தி சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
5. ஆகக்கூடிய கேள்வி கோரும் கேள்விதாரருக்கு 2019.03.21ம் திகதி உற்சவகால வாகன தரிப்பிடம் வழங்கப்படும்.

தவிசாளர்
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C-5742)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம்
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி**
**பரமேஸ்வரி சுப்பிரமணியம்**



அவர்கள் கடந்த 23.02.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(C-5746)

## யாழ்/ பண்ணாகம் விசவர்த்தனை முருகமூர்த்திப் பெருமானுடைய கொடியேற்ற மகோற்சவம்



நடைபெறுவதால் எம் பெருமானின் அருட்கடாட்சம் உலகத்திலுள்ள எல்லோருக்கும் பரிபாலிக்க வேண்டுமென்று கேட்பதுடன் எமது சைவத்தையும் தமிழையும் எந்தக் காலத்திலும் மறக்காமலிருக்க எல்லாம் வல்ல முருகப் பெருமானுடைய அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்கப் பெறுவதாக.

அரசியல் இலாபங்கடந்து சைவத்துக்கும் தமிழுக்கும் முக்கியத்துவம் கொடுப்போமாக, தமிழருக்கு சிறந்த தீர்வு கிடைக்க எம் பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



ந.திரிலோகநாதன்
வலி.மேற்கு பிரதேச முன்னாள் தலைவர்
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்
(வலிகாமம்)

(7935)

# மரண அறிவித்தல்

திருமதி
## றதீஸ்வரி சசிகுமார்



சமரபாகு தேவன்குறிச்சி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றதீஸ்வரி சசிகுமார் அவர்கள் நேற்று (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கனகசபாபதி - பீதாங்கனியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சசிகுமாரின் (பிரதி அதிபர் - கெருடாவில் இ.த.க.பாடசாலை) அன்பு மனைவியும் குமணன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி - 2016 உ/பிரிவு), தனுசா (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி - 2020 உ/பிரிவு), தசானி (மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதீஸ்வரி, ஜெயகாந்தன், குணேஸ்வரி, ஜெயசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் உமாதேவி ஜெகதீஸ்வரன், சசிகலா, தேவநேசன், விநாயககுமார், ரகுநாதன், ஈஸ்வரி, சுகன்யா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ரம்யா, செயோன், சங்கீதா, சர்மிலன், திவிதன், அஸ்விதா, அஸ்வின், அட்சஜன், சஹானா, கிருசிகா, நிதுசிகா, ஜெயவர்த்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2019) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5744)

சமரபாகு, தேவன்குறிச்சி, உடுப்பிட்டி.

தகவல்:- க.சசிகுமார் (கணவர்) 0779331470, ஜெயகாந்தன் (சகோதரர்) 0771544294

# வாக்குறுதிகளை நிறைவேற்ற நிலையான அரசு

# மைத்திரி - மகிந்தவுக்கு பாரிய பொறுப்பு

## மகிந்த அமரவீர வலியுறுத்து



(கொழும்பு)

மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய நிலையானதும் உறுதியானதுமான அரசாங்கத்தை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஒன்றிணைய வேண்டும். இவ்விரு கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரே கூட்டணியாக மாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றதிகார முறைமையை நீக்குவதற்கு பூரண ஆதரவு வழங்க தயாராகவுள்ளோம். தற்போது கனவிலேனும் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா? என்பதில் எமக்குச் சந்தேகம் எழுந்துள்ளது. நிலையான உறுதியான ஒரு அரசாங்கத்தை அமைப்பதே நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியாகும்.

அவ்வாறு உறுதியானதொரு அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். தனித்தனியாக பிரிந்து இதனைச் செய்ய முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாக்காளர் பட்டியலில் பெயர்களை இணைக்கும் முறையில் மாற்றம்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

வாக்காளர் பெயர்ப்பட்டியல்களுக்கான பெயர்களை இணைக்கின்ற முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி சகல மாவட்டங்களிலும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் இந்த வாக்காளர் பெயர்ப்பட்டியல்கள் சேகரிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் ரசிக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போதைப்பொருள் ஒழிப்பில் மும்முரம்

# சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லத்தீபுக்கு சர்வதேச விருது

(கொழும்பு)

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரம் காட்டிய பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளையிடும் அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். லத்தீபுக்கு சர்வதேச விருது கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



ஆசியாவின் கௌரவம் என்ற விருதே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் புகழ் பெற்ற அறிஞரும் முன்னாள் ஜனாதிபதியுமான கலாநிதி அப்துல் கலாமின் பெயரில் இயங்கும் அப்துல் கலாம் முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

## கென்யா சென்ற எதியோப்பிய

# விமானம் விபத்து

# 149 பயணிகள் பலி!

எதியோப்பியாவிலிருந்து கென்யா தலைநகர் நைரோபி நோக்கிச் சென்ற விமானம் விபத்தில் சிக்கியது. இதில் பயணித்த 149 பயணிகள் உயிரிழந்து விட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடு எதியோப்பியா. இந்த நாட்டின் தலைநகர் அடிஸ் அபாபாவில் இருந்து எதியோப்பியா எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 737 விமானம் 149 பயணிகள், 8 ஊழியர்களுடன் நேற்று காலை கென்யா தலைநகர் நைரோபி நகருக்கு புறப்பட்டது.

ஆனால், நைரோபி செல்லும் வழியில் இந்த விமானம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 149 பயணிகள் மற்றும் 8 ஊழியர்கள் உயிரிழந்துவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எதியோப்பிய பிரதமர் அபி அகமது அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில், " எதியோப்பியா எயார்லைன்ஸ் போயிங் 737 விமான விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு எங்களுடைய ஆழ்ந்த இரங்கல்கள் " எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எதியோப்பியா எயர்லைன்ஸ் வெளியிட்ட அறிவிப்பில், தலைநகர் அடிஸ் அபாபா நகரில் இருந்து நைரோபி நகர் நோக்கிச் சென்ற இடி 302 என்ற விமானம் விபத்தில் சிக்கியது.

நேற்று காலை உள்ளூர் நேரப்படி 8.38 மணிக்கு அடிஸ் அபாபா நகரில் இருந்து விமானம் புறப்பட்டது. நகரில் இருந்து 50 கி.மீ தொலைவில் உள்ள பிஷோப்டு பகுதிக்குப்பின் விமானத்தின் சமிக்ஞை கிடைக்கவில்லை என்பதால், இங்கு விபத்து நடந்துள்ளது. மீட்புப்பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. விபத்தில் உயிரோடு இருப்பவர்கள் குறித்த எந்த விதமான உறுதியான தகவலும் இல்லை " எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஒருபோதும் நிறைவேறாது - டளஸ்

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பை நிறைவேற்றித்தான் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்தைப் பெற வேண்டிய அவசியம் கிடையாது.



தேர்தலின் ஊடாக நாட்டு மக்களே ஆட்சியதிகாரத்தை மீண்டும் ஒப்படைப்பார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்ய வேண்டுமாயின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம், தேர்தல் முறைமை போன்ற விடயங்களையும் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கான கால அவகாசமும் தற்போது போதாது.

ஆகவே 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஒருபோதும் நிறைவேறாது என்ற விடயத்தில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சவேந்திர சில்வாவுக்கு எதிராக விசாரணை இல்லை

# போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து உண்மை கண்டறியும் ஆய்வு

## இராணுவத் தளபதி மகேஷ் தெரிவிப்பு





(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, உள்ளக விசாரணைகளை நடத்த இலங்கை இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டதற்கு கடுமையான கவலை வெளியிட்டுள்ளது.

இந் நிலையிலேயே, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக விசாரணைகளை நடத்த இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, "மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக இலங்கை இராணுவம் உள்ளக விசாரணைகளை நடத்தாது.

அதற்குப் பதிலாக, இலங்கை இராணுவம் மீது எதற்காக போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன என்ற காரணத்தை கண்டறிவதற்காக, உண்மை கண்டறியும் ஆய்வு ஒன்று நடத்தப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## நிறைவேற்றதிகாரத்தால்

# நாடு நிர்க்கதி

## அநுர கவலை



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமை காரணமாக நாடு நிர்க்கதியாகவுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் மிக முக்கியமான இரண்டு விடயங்களாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்டஜனாதிபதிமுறைமை மூலம் நாடு நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# முன்னால் சீறிய கவாஜா, ஹேண்ட்ஸ்கோம்ப் பின்னால் பாய்ந்த ரேர்னர்

## மொகாலியில் ஆஸி., மகத்தான வெற்றி



கன்னிச் சதம் அடித்த மகிழ்வில் ஆஸியின் ஹேண்ட்ஸ்கோம்ப்

மொகாலி ஒருநாள் போட்டியில் சாத்திய மற்ற ஓட்டஎண்ணிக்கையை கவாஜா, ஹேண்ட்ஸ்கோம்ப், ரேர்னர் உதவியுடன் துணிச்சலாக விரட்டிய அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய பந்துவீச்சாளர்கள் மீண்டும் ஏமாற்றம் அளித்தனர். தவான் சதம் வீணானது.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகள் முடிவில் இந்தியா 2;1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் நான்காவது ஒரு நாள் போட்டி மொகாலியில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் தோனி, ராயுடு, ஷமி, ஜடேஜாவுக்குப்பதில் ரிஷாப், லோகேஷ் ராகுல், புவனேஷ்வர், சகால் இடம் பிடித்தனர். அவுஸ்திரேலிய அணியில் ஸ்ரொய்னிஸ், லயன் நீக்கப்பட்டு ரேர்னர், பெஹ்றன்டர்ப் சேர்க்கப்பட்டனர்.

**அபார ஆரம்பம்**

இந்திய அணிக்கு ரோகித், ஷிகர் தவான் ஜோடி 'சுப்பர்' ஆரம்பம் கொடுத்தது. கம்மின்ஸ் பந்துவீச்சில் தவான் இரண்டு பவுண்டரி அடித்தார். ரோகித் தான் சந்தித்த 23வது பந்தில் சிக்சர் அடித்தார். இருவரும் அரை சதம் கடந்தனர். சமீபகாலமாக, விமர்சனத்தை எதிர் கொண்ட தவான் மிரட்டினார். முதல் விக்கெட்டுக்காக 193 ஓட்டங்கள் சேர்த்தபோது, ரோகித் (96) சத வாய்ப்பை பறிகொடுத்தார். மூன்றாவது இடத்தில் அணித் தலைவர் ஹோலிக்குப்பதில் லோகேஷ் ராகுல் களமிறங்கினார்.

**தவான் சதம்**

தவான் ஒரு நாள் அரங்கில் 16ஆவது சதம் எட்டினார். பெஹ்றன் டர்ப் வீசிய 37வது ஓவரில் தொடர்ந்து இரண்டு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். கம்மின்ஸ் பந்தில் தவான் (143) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஹோலி 7 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார். ஷாம்பா 'சுழலில்' லோகேஷ் ராகுல் (26) சிக்கினார். ரிஷாப் 36 ஓட்டங்கள் எடுத்தார். கம்மின்ஸ் பந்துவீச்சில் ஜாதவ் (10), விஜய் சங்கர் (26) ஆட்ட மிழந்தார். சகாலை டக் அவுட்டாக்கிய கம்மின்ஸ் 5வது விக்கெட்டை வீழ்த்தினார்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 358 ஓட்டங்களை எடுத்தது. குல்தீப் (1), பும்ரா (6) ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக கம்மின்ஸ் 5 விக்கெட்டுக் களை வீழ்த்தினார்.

**பின்ச் அதிர்ச்சி**

கடின இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. புவனேஷ்வரின் முதல் ஓவரில் அணித் தலைவர் பின்ச் டக் அவுட்டானார். ஷார் மார்ஷ் (6) ஜொலிக்கவில்லை. அவுஸ் திரேலியா 12 ஓட்டங்களை எடுப்பதற்குள் 2 விக்கெட்டை இழந்து தடுமாறியது. கவாஜா, ஹேண்ட்ஸ்கோம்ப் ஜோடி நம்பிக்கையுடன் விளையாடியது. பும்ரா பந்துவீச்சில் கவாஜா தொடர்ந்து இரண்டு பவுண்டரி அடித்தார். சகால் பந்தை ஹேண்ட்ஸ்கோம்ப் பவுண்டரிக்கு அனுப்பினார். இருவரும் அரைச்சதம் கடந்தனர்.

**ரேர்னர் விளாசல்**

பும்ரா பந்தில் ஒரு வழியாக கவாஜா (91) சிக்கினார். ஹேண்ட்ஸ்கோம்ப் ஒரு நாள் போட்டியில் முதல் சதம் எட்டினார். குல்தீப் பந்தில் 'ஆபத்தான' மக்ஸ்வெல் (23) சிக்க, வெற்றி கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பின் வந்த ரேர்னர் இந்திய ரசிகர்களின் இதயத்துடிப்பபை அதிகரிக்க செய்தார். பெயருக்கேற்ப ஆட்டத்தின் போக்கை மாற்றி காட்டினார். ஹேண் ட்ஸ் கோம்ப் 117 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அரைச்சதம் கடந்த ரேர்னரின் விளாசலை புவனேஷ்வர், பும்ரா என யாராலும் தடுக்க முடியவில்லை. இவர் புவனேஷ்வரின் 47ஆவது ஓவரில் இரண்டு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாச, இந்தியாவின் வெற்றி பறிபோனது. கேரி (21) ஆட்டமிழந்த போதும் பயன் இல்லை.

47.5 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 359 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரேர்னர் (84 ஓட்., 43 பந்துகள், 5 பவுண்டரி, 6 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனையடுத்து, தொடர் 2-2 என சமநிலையை எட்டியது. இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் 13ஆம் திகதி டில்லியில் நடக்கிறது.



இந்தியாவை பிளந்து கட்டிய ரேர்னரின் அதிரடிகளில் ஒன்று

**சிறந்த 'சேஸ்'**

மொகாலியில் அசத்திய அவுஸ்திரேலிய அணி, 359 ஓட்டங்களை 'சேஸ்' செய்தது. இதன் மூலம் ஒருநாள் போட்டி வரலாற்றில் இந்தியாவுக்கு எதிராக அதிக ஓட்டங்களை 'சேஸ்' செய்து புதிய சாதனை படைத்தது. இதற்கு முன், பாகிஸ்தான் (இடம்: மொகாலி, 2007), இலங்கை (இடம்: லண்டன், 2017) அணிகள் தலா 322 ஓட்டங்களை 'சேஸ்' செய்தது சாதனையாக இருந்தது.

◈ கடந்த 2011ல் பெங்களூருவில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து அணி 338 ஓட்டங்கள் எடுத்து 'சமன்' செய்திருந்தது.

◈ தவிர இது, ஒருநாள் போட்டி வரலாற்றில் பதிவான 5ஆவது சிறந்த 'சேஸ்'. கடந்த 2006ல் ஜொகனஸ்பேர்க் நகரில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி 435 ஓட்டங்களை 'சேஸ்' செய்திருந்தது உலக சாதனையாக உள்ளது.

**717 ஓட்டங்கள்**

மொகாலிஒருநாள்போட்டியில் இந்தியா (358), அவுஸ்திரேலியா (359) அணிகள் இணைந்து மொத்தம் 717 ஓட்டங்கள் குவித்தன. ஒரு நாள் போட்டி வரலாற்றில் இவ்விரு அணிகள் இணைந்து 4வது முறையாக 700 அல்லது அதற்கு மேல் ஓட்., சேர்த்தன. இதற்கு முன், ஜெய்ப்பூர் (721 ஓட்., 2013), பெங்களூரு (709 ஓட்., 2013), நாக்பூர் (701 ஓட்., 2013) நகரங்களில் நடந்த போட்டியில் இவ்விரு அணிகள் இம்மைல்கல்லை எட்டின.

## வோக்னர், போல்ட் அபாரம்

### வங்கம் 211 ஓட்டங்களுக்கு சரண்

மூன்றாவது டெஸ்டில் நியூசிலாந்தின் வோக்னர், போல்ட் அசத்த பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்சில் 211 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

நியூசிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் நியூசிலாந்து வென்றது. இரண்டாவது டெஸ்ட் வெலிங்டனில் நடக்கிறது. முதலிரண்டு நாள் ஆட்டம் மழையால் ரத்தானது. மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**தமிம் அரை சதம்**

பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால், ஷாத்மன் ஜோடி சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 75 ஓட்டங்கள் சேர்த்த போது, ஷாத்மன் (27) ஆட்டமிழந்தார். வோக்னர் 'வேகத்தில்' மொமினுல் (15), மொஹமட் மிதுன் (3) சிக்கினர். தமிம் (75) அரை சதம் கடந்தார். அணித் தலைவர் மகமுதுல்லா 13 ஓட்டங்கள் எடுத்தார். போல்ட் 'வேகத்தில்' முஸ்தபிசுர் ரஹ்மான், எப்தாத் டக் அவுட்டாகினர். பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்சில் 211 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் அதிகபட்சமாக வோக்னர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணிக்கு ராவல் (3), லைதம் (4) சொதப்பினர்.

மழை வர ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது. நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 38 ஓட்டங்களை எடுத்து, 173 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது. அணித்தலைவர் வில்லியம்சன் (10), ரோஸ் ரெய்லர் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



விக்கெட் ஒன்றை கைப்பற்றிய மகிழ்ச்சியில் நியூசிலாந்தின் வோக்னர்


**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி **கிருசாந்தி சிவகுமார்** அவர்களின் பாசமிகு மாமனார்

**கந்தப்பர் சண்முகம் குமாரசாமி**

அவர்கள் 27.02.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(C-5747)

# பாதீட்டை தோற்கடிக்க அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்

(கொழும்பு)

தேர்தலை இலக்காக கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டை தோற்கடிக்க அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அதன் தலைவர் வசந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த பாதீட்டில் தனியார் துறைக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வெடிகுண்டு அகற்றும் படையணிக்கு உயர்ரக நாயொன்றை வழங்கிய ஐக்கிய இராச்சியம்



(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தலைமையில் முன்னெடுக்கப்படும் வெடிகுண்டு அகற்றும் திட்டத்திற்கமைவாக ஐக்கிய இராச்சியத்தின் மார்ஷல் மரபுரிமை அமைப்பால் பெல்ஜியம் மாலினோஸ் எனப்படும் இனத்தைச் சேர்ந்த நம் எனும் பெயரையுடைய நான்கு வயதுடைய நாயொன்று பொறியியலாளர் படையணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

"நம்" பொஸ்னியாவில் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதியன்று பிறந்துள்ளதுடன் இது வடக்கு ஈராக்கின் வெடிகுண்டு அகற்றும் படையணியில் சேவையாற்றியதுடன் இதன் பயிற்றுவிப்பாளரான ஏடிஸ் பெல்டோவினால் இலங்கை இராணுவத்தின் 08 மோப்ப நாய்களைக் கொண்ட வெடிகுண்டு அற்றும் படையணிக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# மகிந்தானந்தவின் மகனின் வாகனம் மோதி காயமடைந்த பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

(கொழும்பு)

மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயின் மகனின் வாகனத்துடன் மோதி காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பொரளை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி அதிகாலை பம்பலப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் குறித்த பொலிஸ் பரிசோதகர் படுகாயமடைந்திருந்தார்.

விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயின் மகன் உள்ளிட்ட குழுவினர் கைது செய்யப்பட்டிருந்தனர். பின் வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி மட்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனம் மறைத்து வைத்திருந்த நிலையில் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

கந்தளாய் - அக்போபுர பகுதியில் அரசாங்கத்திற்கு சொந்தமான ஜீப் வண்டியொன்று வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பிரதேச மக்கள் அக்போபுர பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட உறுப்பினர் ஒருவரின் வீட்டில் இருந்து இந்த வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கந்தளாய் - சீனிபுர பகுதியில் குறித்த வாகனம் மாடு மீது மோதி விபத்துக்குள்ளானதாக கடந்த 26 ஆம் திகதி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சால் இந்த வாகனம் தமக்கு வழங்கப் பட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

விபத்து கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றாலும் அண்மையில் பிரதமர் கலந்துகொண்ட நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்ய வேண்டியிருந்ததால் முறைப்பாடு செய்வதில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**KC-0443** என்ற இலக்கம் கொண்ட குறித்த வாகனம் மோட்டார்வாகன திணைக்கள தரவுகளுக்கு அமைய வெளிவிவகார அமைச்சுக்கு சொந்தமானது எனத் தெரியவருகிறது.

2006 இல் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வாகனத்தை வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி விற்கவோ, மாற்றவோ, அழிக்கவோ முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1945.03.25 — மறைவு 2019.03.08



## அமரர்.ஆழ்வார் கந்தசாமி

எமது கல்லூரியின் அதிபர் **திரு.கந்தசாமி கண்ணன்** அவர்களின் அன்பு மாமனார் **அமரர் ஆழ்வார் கந்தசாமி** (சமாதான நீதிவான், ஓய்வு பெற்ற களஞ்சிக் காப்பாளர், இ.போ.ச. பருத்தித்துறைச்சாலை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ஞானாசாரியார் கல்லூரி,கரவெட்டி.

(C-579)


# தனிநபர் கடன் 4 இலட்சத்து 10 ஆயிரம்

# ஊழல்மிக்க நாடுகளின் வரிசையில் இலங்கை மிக வேகமாக இணைவு

(கொழும்பு)

நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் தவறியுள்ளதாகவும், தான் உட்பட அரசியலில் இருக்கும் சகலரும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஹங்கம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரத்திற்கு பின் கடந்த 71 ஆண்டுகளாக அரசாங்கங்கள் இருந்த போதிலும் அவற்றால் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை.

இலங்கையின் தனி நபர் கடன் 4 இலட்சத்து 10 ஆயிரத்து 77 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஊழல் மிக்க நாடுகளின் வரிசையில் இலங்கை மிக வேகமாக இணைந்து வருகிறது.

நாடு வங்குரோத்து நிலைமை அடையும் மட்டத்தை நெருங்கி வருகிறது. அரசியல் ஆதாயங்களை கருதாது நாட்டை இந்த நிலைமையில் இருந்து மீட்க வேண்டும் எனவும் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

11.03.2019

மாசி 27, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 2.18 மணிவரை

பரணி பின்னிரவு 1.56 மணிவரை

சுபநேரம் 12.23-1.53 மணிவரை

இராகுகாலம் 7.53-9.23 மணிவரை

வளவன்

கிரகநிலை: செவ், சந்; ராகு; சூரி, புத; சுக்; சனி, கேது; குரு

சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி

**மேடம்:** வேலைச்சுமை கூடும், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**இடபம்:** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறைகளும் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொறுமையால் பெருமை சேரலாம்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** நண்பர்களின் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணத்தால் பலனுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, சிக்கல்கள் விலகி இழப்புக்கள் கூடும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தொழிலில் மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, பிரயான பயமுண்டு, பண விரயங்கள் கூடும் நாள்.

**துலாம்:** நண்பர்கள் மூலம் நன்மைகள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.


**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உடன்பிறப்புக்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், கௌரவமான நாள்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், உறவினர் வழியில் அன்பு தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், வேலையில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ்கூடும், வாக்கு மேன்மையுண்டு, தனவரவு திருப்திகரமாக அமையும்.



நல்லூர் பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய விளம்பி வருட மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

## கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வாழ்ந்து வருகின்ற இளம் கலைஞர்களின் கலைச்சேவையை ஊக்குவிக்கும் முகமாக 40 வயதிற்குட்பட்ட துறைசார்ந்த ஆளுமைமிக்க இளம் கலைஞர்களுக்கான ஊக்குவிப்புப் பரிசு இவ்வருடம் நடைபெறவுள்ள வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

கவிதை, சிறுகதை, நாவல், வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓகன், ஆர்மோனியம் போன்றன), நடனம், ஓவியம், சிற்பம், கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்து நடைக்கூத்து), நாடகம் (எழுத்துரு, நடிப்பு, நெறியாள்கை), இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), ஊடகம் மற்றும் திரைப்படத்துறை, இசைநாடகம், புகைப்படம், கைவினை போன்ற துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 2018.12.31 அன்று நாற்பது வயதைப் பூர்த்தி செய்யாத கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று 22.03.2019 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (இ)

## அளவெட்டியில் இஞ்சி அறுவடை



(யாழ்ப்பாணம்)

சிறந்த விவசாய பெருமகனாக ஜனாதிபதி விருது பெற்ற சேனாதிராஜா பிறேமகுமார் தனது அளவெட்டி பிரதேசத்தின் விவசாய விளை நிலத்தில்வெற்றிகரமாக இஞ்சி செய்கையை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத் தலைவரும் முன்னாள் விவசாய பிரதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், சேனாதிராஜா பிறேமகுமாரின் விளை நிலப்பகுதிக்கு நேற்று முன்தினம் சென்றதோடு, யாழ்.மாவட்டத்தில் முதலாவதாகவும் வெற்றிகரமாகவும் செய்கை பண்ணப்பட்ட இஞ்சி அறுவடையையும் ஆரம்பித்து வைத்தார்.

மூன்றாவது தலைமுறையாகவும் விவசாயத்தை மேற்கொண்டு வருவதோடு 9 ஏக்கரில் மேட்டு செய்கையும், 2 ஏக்கரில் வயல் செய்கையையும் மேற்கொண்டு வருகிறார்.

பல்வேறு விவசாய விருதுகளுக்கும் சொந்தக்காரராகவும் பிறேமகுமார் விளங்குகிறார்.

**TOM EJC** இன மாமர விளைநிலப்பரப்பில், ஊடு பயிர்ச் செய்கையாக இஞ்சி செய்கையை மேற்கொண்டுள்ளார். 15 கிலோ கிராம் விதை இஞ்சியை நடுகை செய்து.1200 கிலோ கிராம் விளைதிறனாக அறுவடையும் செய்துள்ளார்.

ஒரு கிலோ கிராம் 350 ரூபா வீதம்.விற்பனைக்கான சந்தை வாய்ப்பாகவும் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குடும்பப்பதிவை நீக்கியமை அடிப்படை உரிமை மீறலாகும்

### பிரதேச செயலகத்திற்கு மனிதவுரிமை ஆணைக்குழு இடித்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

முறைப்பாட்டாளரின் குடும்பம் கல்வியின் நிமிர்த்தம் யாழ்ப்பாணத்தில் வசிப்பதால் அவரின் சம்மதமின்றி குடும்பப் பதிவை நீக்க முடியாதென தெல்லிப்பழைப் பிரதேச செயலாளருக்கு யாழ். மனித உரிமை ஆணைக்குழு கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/222 சேந்தான்குளம் இளவாலையைச் சேர்ந்த முறைப்பாட்டாளரின் சம்மதமின்றி அவருக்கு தெரியாமல் அவரது குடும்பப் பதிவை நீக்கியமை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பின் அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும்என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, தெல்லிப்பழை சேந்தான்குளம் இளவாலையைச் சேர்ந்த ஜே/222 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசித்து வந்த தனது குடும்பம் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்காமல் யாழ்ப்பாணத்திலேயே வசிப்பதாகக் கூறி தனது பதிவை தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திலிருந்து கடந்த வருடம் 09 ஆம் மாதம் நீக்கிவிட்டதாகப் பாதிக்கப்பட்ட நபரால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இம்முறைப்பாட்டில்தனது பிள்ளைகளின் எதிர்காலக் கல்வித் தேவையைக் கருத்தில் கொண்டே யாழ்ப்பாணத்தில் தங்க வைத்துள்ளதாகவும்தனது தொழில், உபகரணம், காணி, வாக்குரிமை அனைத்தும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ளதால் தனது குடும்பப்பதிவை நீக்குவதற்கு பிரதேச செயலாளருக்கு உரிமை கிடையாதென முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இவரது முறைப்பாடு தொடர்பாகத் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிற்கு விளக்கமளித்தபோது குறித்த நபரின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளதால் தமது நிர்வாக ரீதியான நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்தார்.

இதனை ஏற்காத முறைப்பாட்டாளர் தான் ஒவ்வொரு நாளும் தனது தொழிலுக்காக தெல்லிப்பழை சேந்தான்குள கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கே வருவதாகவும் தனது குடும்பம் தொடர்பில் எவ்வாறான நிர்வாகச் சிக்கல்களை பிரதேச செயலர் சந்தித்தார் எனக் கேள்வியெழுப்பி மனித உரிமை ஆணைக்குழுவிடம் மீண்டும் கடந்த மாதம் 21 ஆம் திகதி முறைப்பாடு செய்தார்.

அவரது முறைப்பாட்டை ஆராய்ந்த யாழ்.மனித உரிமை ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் யாப்பின் பிரகாரம் ஒவ்வொரு பிரஜையும் இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும் தாம் விரும்பிய இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரத்தை கொண்டுள்ளனர் எனவும் தேசிய பாது காப்புக்காக மட்டுமே (உறுப்புரை 15) மட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் மேற்கொள்ள முடியுமென சுட்டிக்காட்டியது.

எனவே முறைப்பாட்டானது குடும்பப்பதிவை ஜே/222 அதே கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீண்டும் மேற்கொண்டு அதன் பிரதியுடன் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளரைக் கேட்டுக் கொண்டார். (இ-10)

## நுளம்பு பெருக காரணமானவர்களுக்கு 10 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பு பெருகுவதற்குரிய சூழலை வைத்திருந்த 7 பேருக்கு யாழ். மேலதிக நீதவான் கடந்த முதலாம் திகதி 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த கொக்குவில் 01 பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் ஜே/110 மற்றும் ஜே/114 கிராம அலுவலர் பிரிவுகளுக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கை யிலே டெங்கு நுளம்பு பரவும் சூழல் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனடிப்படையில் குறித்த பகுதியைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி மேற்படி அபராதம் விதித்தார். (5-10-272)

## பங்குனி குளிர்த்திப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார் பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் பங்குனி குளிர்த்திப் பெருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் பாற்குடப் பவனி, கற்பூரச்சட்டி, பொங்கல் என்பன இடம் பெறவுள்ளதால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் ஆலய பரிபாலன சபையினரைத் தொடர்பு கொள்ளவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)



தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமம் கிளை அனுசரணையுடன் மட்டுவில் வளர்மதி மாதர் அபிவிருத்தி சங்கம் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தினம் வளர்மதி விளையாட்டரங்கில் கடந்த 8 ஆம் திகதி மாதர் அபிவிருத்தி சங்க தலைவர் திருமதி லூ.சிவாஜினி தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒளி அரசி மகளிர் சஞ்சிகை இணை ஆசிரியர் திருமதி ஜமிலா பார்த்தீபன், சிறப்பு விருந்தினராக தென்மட்டுவில் சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி பிறேமினி றோகான், ஒருங்கிணைப்பாளர், கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அன்ரன் யோகநாயகம், மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# 11 தமிழர்கள் கடத்தல் வழக்கு

## வசந்த கரன்னகொட இன்று சி.ஐ.டியில் ஆஜர்



(கொழும்பு)

பல வாரங்களாக பொலிஸாரிடமிருந்து மறைந்திருந்த கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட இன்று சி.ஐ.டியில் ஆஜராகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையவே இவர் இன்று சி.ஐ.டியில் ஆஜராகவுள்ளார்.

வசந்த கரன்னகொடவை கைது செய்ய கடந்த வியாழக்கிழமை தடைவிதித்த உயர்நீதிமன்றம் இன்று சிஐடியில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டது.

2008-2009ஆம்ஆண்டு காலப்பகுதியில் கொழும்பில் 11 தமிழ் இளைஞர்களைக் கடத்தி கொலை செய்ததாக வசந்த கரன்னகொட மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த பெப்ரவரி 21ஆம் திகதியிலிருந்து கரன்னகொட பொலிஸாரிடம் இருந்து மறைந்து வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐம்பது ரூபாய் கொடுப்பனவை தோட்டத்தொழிலாளர்களுக்கு நிச்சயம் பெற்றுக்கொடுப்போம்

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 50 ரூபாய் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் என அரசாங்கத்தினால் உறுதி அளிக்கப்பட்டது. அதற்கமைய 50 ரூபாய் மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் மற்றும் இந்துமத கலாசார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவரது அமைச்சில்நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த 21 சகவாழ்வு சங்கங்களுக்கு தளபாடங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வை தொடர்ந்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தோட்டத்தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளமைக்கு அமைய சம்பள உயர்வு தொடர்பாக ஆராயப்பட்டு நாளொன்றுக்கு 50 ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளன.

தோட்டத்தொழிலாளர்களின் 1000 ரூபாய் சம்பள உயர்வை பெற்றுத்தருவோம் என்ற பொய்யான வாக்குறுதிகளை அளித்து அவர்களை மீண்டும் மீண்டும் ஏமாற்ற நாம் தயாராகவில்லை. மாறாக மேலதிக கொடுப்பனவாக 50 ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்படவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் தோட்டக் கம்பனிகள் தனியாருடையவையாக காணப்படுவதனால் குறித்த விடயம் தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்படவேண்டிய அவசியம் இல்லை.

இருப்பினும் தோட்டத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வாறாக பிரச்சினைக்கு ஆராய்ந்து தீர்வு காணும் வகையிலேயே சம்பள உயர்வு பிரச்சினை ஆராய்ப்படுதல் தொடர்பிலான முன்மொழிவுகள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

பழமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்
(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# வை-பை வசதிகளை பயன்படுத்தியோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பொது இடங்களில் வழங்கப்படும் இலவச வை-பை வசதிகளைப் பயன்படுத்தியோரின் எண்ணிக்கை நான்கரை இலட்சத்தைத் தாண்டியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் சேவை அறிமுகப்படுத்தப்பட்ட நாள்தொடக்கம் இதுவரை சுமார் 80 ஆயிரம் ஜி-பி அளவு தரவுகள் பயன்படுத்தப்பட்டன என பிரதமரின் அலுவலகத்தில் கொள்கை அபிவிருத்திப் பிரிவு அறிவித்துள்ளது. இலவச வை-பை திட்டத்தின் கீழ் ஆயிரத்து 176 இடங்களில் வை-பை வசதிகள் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாடகைக்கு

நீர்வேலி இராஜபாத வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(7983)

தொடர்புகளுக்கு: 077 931 9434

## ஸ்ரீ கொல்லிமலை மாந்திரீக ஜோதிடர் மாந்திரீக சித்தர் யாழ்ப்பாணம் வருகை



ஜாதகம், குறிப்பு, கைரேகை ஆண்,பெண் வசியம். தொழில் கணவன் மனைவி பிரபலம் மற்றும் குழந்தை பாக்கியம், வெளிநாட்டு யோகம் ஆகிய அனைத்தும் சிறந்த முறையில் சொல்லப்படும்.



நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணி வரை
076 495 1787, 077 897 1672
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் வீதி (கொழும்பு வேர்க் ஷாப் எதிரில்)

(7779)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 2<br>கி.பா: 44சூரி செவ் 7 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:A/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு:A/L, உள்நாடு<br>தொ.இ: B/9440 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 52செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டப்படிப்பு, தலைமைதாதியர்<br>எதிர்பார்ப்பு:அரசதனியார் சொந்த தொழில், உள்நாடு<br>தொ.இ: G/9453 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா: 10<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Dip.in Electrical Engineering , ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம்,உள்நாடு<br>தொ.இ: B/9441 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:மகம் 1<br>கி.பா: 7 ¾<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, உள்நாடு<br>தொ.இ: G/9454 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4செவ் 2 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:A/L, Swiss<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு PR<br>தொ.இ: B/9443 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 28<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.Sc, Software Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant, Lecturer,உள்நாடு<br>தொ.இ: G/9455 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1செவ் 2 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:B.Scபட்டதாரி அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்,உள்நாடு<br>தொ.இ: B/9447 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்,உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/9461 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.முருகேசு முரளிதரன்

MED,SLPS-I, / சித்தாந்த பண்டிதர்
சைவப்புலவர்,
இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க
யாழ்.மாவட்ட தலைவர்,
நவமங்கை நிவாசம்-செயலாளர்.
(அதிபர். யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்)

உயர்வுகளின் முதல்வனாய்
கல்வியுடன் வீரம் சேர்
சமூகத் தலைவனாய்
மாணவர் மனங்களில்
உணர்வுக் கலைஞனாய்
பல்பரிமாணங்களில் தடம் பதித்து
அரும்பணி புரியும்




எமது பாடசாலையின் அதிபர் திரு.முருகேசு முரளிதரன் அவர்கள் மத்திய கல்வியமைச்சின் கல்விச் சேவை ஆணைக்குழுவால் கடந்த 2015.11.16 முதல் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இற்கு பதவியுயர்த்தப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் வளம் பல பெற வாழ்த்துகின்றோம்.

(7910)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

# இந்திய இராணுவ இரகசியங்களை இலங்கைக்கு கசியவிட்ட கருணாநிதி

## தமிழக பா.ஜ.க தலைவர் தமிழிசை விமர்சனம்



(சென்னை)

இந்திய இராணுவம் சம்பந்தப்பட்ட இரகசியங்களை கருணாநிதி ஆட்சியில் இலங்கைக்கு தெரிவித்ததால் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது என்பது வரலாறு என தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் விமர்சனம் செய்துள்ளார்.

"மத்திய மாநில அரசின் கண்காணிப்பில் இருந்து முக்கிய ஆவணங்கள் திருடு போவதாக கூறப்படுவது இது முதல் முறை அல்ல. கடந்த காலங்களில் காங்கிரஸ் ஆட்சியில் ப. சிதம்பரம் நிதி அமைச்சராக இருந்தபோது, நிதி நிலை அறிக்கை வெளியிடுவதற்கு முன்பே, காணாமல் போன நிகழ்வுகள் உண்டு.

கடந்த காலத்தில் இந்திய இராணுவம் சம்பந்தப்பட்ட இரகசியங்களை முன்னாள் முதல்வர் அமரர் கருணாநிதி ஆட்சியில் இலங்கைக்கு தெரிவித்ததால், சந்திரசேகர் பிரதமராக இருந்த காலத்தில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது என்பதும் வரலாறு.

தமிழக வரலாற்றிலும் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, திருச்செந்தூர் முருகன் கோவிலில் வேல் காணாமல் போன திருட்டை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட பால் கமிஷன் அறிக்கையை, சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கும் முன்பே அதை திருடி வெளியிட்டது.

தி.மு.க. என்பது கடந்த கால வரலாறு. பால் கமிஷன் அறிக்கையை திருடி வெளியிட்டதால்; திருச்செந்தூர் முருகன் கோவில் நிர்வாகி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார் என்பதும், அதற்கான நீதி விசாரணை கேட்டு கருணாநிதி நடை பயணம் செய்ததும் வரலாறு.

இதே பின்னணியில் வந்த தி.மு.க. தலைவர் ஸ்டாலின் அரசாங்கத்தின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட இராணுவ இரகசிய ஆவணங்கள் முறைகேடாக திருடி பத்திரிகைகளில் கசிய விடுவது, நாட்டுக்கு பாதகமாகவும், எதிரி நாட்டுக்கு சாதகமாகவும் அமையும் என்பதால், இந்த விடயத்தை கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டிக்காமல், ஏதோ இதையும் மோடி எதிர்ப்புக்கு ஆதரவாக எடுத்துக்கொண்டு, திருடுபவர்களுக்கு ஆதரவாகவும், ஊக்கமளிப்பதாகவும் கருத்து வெளியிடுவது கண்டிக்கத்தக்கது.

ஒரு பொறுப்பான எதிர்க்கட்சி, நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் செய்யலாமா..? இப்படி திருடுபவர்களை, திருட்டை நியாயப்படுத்துவோர்களையும் அதற்கு துணை போனவர்களையும் தேசத்துரோகிகள் என்று அழைப்பதில் என்ன தவறு..? தன் சுயநல பதவி சுகத்திற்காக, திருட்டுகளை நியாயப்படுத்தும் இவர்களும் ஜனநாயக திருடர்களே..!" என அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

# யாழில் திருடன் கைது; 6பவுண் நகை மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்கன்குளப் பகுதியில் நகைத் திருட்டில் ஈடுபட்ட நபரை பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கைது செய்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டு அரியாலை புங்கன்குளப் பகுதியில் உள்ள வீடொன்றின் புகைக்கூடு வழியாக உள்நுழைந்த திருடன் அங்கிருந்த 5 பவுண் நகையை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

அவன் அங்கிருந்து தப்பிச் செல்வதை கண்ட பெண்ணொருவர் அவனைத் துரத்திச் சென்ற நிலையில் அப்பெண்ணையும் தாக்கிய திருடன் அவரிடம் இருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியையும் பறித்துச் சென்றுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான விசேட பொலிஸ் குழு நடத்திய புலனாய்வு ரீதியான விசாரணையில் திருடன் இனங்காணப்பட்டுள்ளான்.

இதன்படி நேற்று முன்தினம் காலை புங்கன்குளப் பகுதிக்குச் சென்ற விசேட பொலிஸ் குழு அவரை கைது செய்துள்ளது.

அவனிடமிருந்த 6 பவுண் நகையையும் பொலிஸார் மீட்டுள்ளனர். விசாரணையின் பின்னர் குறித்த நபரை சான்றுப்பொருளுடன் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-89)

## மக்கள் நலன் சாராத

# வரவு -செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க தீர்மானம்

## ஜே.வி.பி. எம்.பி.பிமல் யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்த அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட வரவு-செலவுத் திட்டம் மக்களின் நலன் சாராதமையினால், வன்மையாகத் கண்டிப்பதுடன், வரவு-செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழிலுள்ள மக்கள் விடுதலை முன்னணி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் ஊடகவியலாளர்களால்எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணியாகிய நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கவும் இருக்கின்றோம்.

இந்த வரவு-செலவுத் திடடம் மக்கள் நலன்சார்ந்த வரவு-செலவுத்திட்டமாக இல்லாத காரணத்தால் எதிர்ப்பதற்கு தீர்மானித்துள்ளோம். போலியாக ஆங்காங்கு ஒரு சில வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தியிருந்தாலும் கூட, மக்களின் நலன் சார்ந்து உருவாக்கப்படவில்லை என்பதே மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு.

கடந்த 2018ஆம் ஆண்டு வடமாகாணத்தில் மாத்திரம் 69 பெண்கள் நுண்கடன் வசதிகளைப் பெற்று மீளச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக புள்ளிவிபரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறான கடன் திட்டத்தை நீக்குவதற்கு ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கான ஒரு வார்த்தை கூட இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கிடையாது.

வடக்கில் மாத்திரமன்றி முழு இலங்கையிலும் இருக்கும் இளைஞர்-யுவதிகள் தொழில்வாய்ப்பினைக் கேட்டு போராட்டங்களை முன்னெடுக்கும் செயற்பாடுகள் இன்றும்கூட நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அது சம்பந்தமாக கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு வார்த்தை கிடையாது. எனவே, மக்களை ஏமாற்றுகின்ற வரவு-செலவுத் திட்டமென்று கூறுவதுடன், எமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கவுள்ளோம்.

இந்த வரவு-செலவு திட்டத்தின் கீழ் வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடிய, வடக்கில் உள்ள தொழிற்சாலைகளை மீள உருவாக்குவதற்கான ஒரு திட்டமும் இல்லை.

இங்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாயின், இந்தப் பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலைகளை புனரமைக்க வேண்டிய தேவை உள்ளது. இவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த வித வார்த்தைப் பிரயோகங்களும் உள்ளடக்கப்படவில்லை.

ஆகையால், வடக்கிலுள்ள எந்தப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், இந்த வரவு-செலவுத் திட்டம் மக்களுக்கு திருப்தியானது என்று கூறி வரவு-செலவுத் திட்டத்திற்கு சார்பாக வாக்களிக்க முடியாது என்பதனையும் சுட்டிக் காட்டினார். (இ-101)

# ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு

## பெயர் குறிப்பிட மனோ மறுப்பு

(கொழும்பு)

எதிர்வரும்ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர், தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது. எனினும் தற்போது அந்த வேட்பாளரின் பெயரை வெளியிடமுடியாது என்றும் அதன் தலைவரும் அமைச்சருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள கட்சிகள் இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளன.



எனினும் தற்போது வேட்பாளரின் பெயரை வெளியிட முடியாது. மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணங்கியுள்ளார்" என்றும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். (இ-7)

# சுலக்சனின் நினைவு நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

கடந்த 2016 ஆம் ஆண்டு கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன் மற்றும் கஜன் ஆகியோரில் சுன்னாகத்தைச் சேர்ந்த மாணவன் அமரர் சுலக்சனின் 27ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

சுலக்சனின் நினைவாக கே.கே.எஸ் வீதி உடுவிலில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் தரிப்பிடத்தில் கொல்லப்பட்ட மாணவர்களின் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு நினைவுரை ஆற்றினார்.

இதில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் சுலக்சனின் நினைவாக சுமார் 100 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சுலக்சனின் உறவினர்கள், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-89)

# மகிந்த திருட்டு வழியால் வந்து ஆட்சியைப் பெற்றுக்கொண்டார்

## அஜித் மன்னப்பெரும விசனம்

(கொழும்பு)

நாட்டின் கடன்சுமையை அடைக்க வழியில்லாமல் தப்பிச்சென்ற மகிந்த ராஜபக்ஷ திருட்டு வழியால் வந்து ஆட்சியை பெற்றுக் கொண்டார். அதன் காரணமாகவே அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டன என இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பின் நான்காவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜபக்ஷ அரசாங்கம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்து மக்களுக்கு பிரயோசனமற்ற வேலைத் திட்டங்களையே மேற்கொண்டுள்ளன.

அதனால் அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை அடைப்பதற்கு வழி தெரியாமல் ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே தேர்தலுக்கு சென்று தப்பிச் சென்றார்.

ஆனால் நாங்கள் ஆட்சியை பெற்றுக்கொண்டு கடன்களை அடைப்பதற்கான வழிகளை ஏற்படுத்தி அதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு சென்றோம். என்றாலும் மகிந்த ராஜபக்ஷ் திருட்டு வழியால் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்தார்.

இதனால் எமது பயணம் தடைப்பட்டது. அதன் விளைவாகவே வரவு- செலவு திட்டத்தையும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கவேண்டி ஏற்பட்டது எனத் தெரிவித்தார். (இ-7)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 305 சாரதிகள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை வரை மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட வாகன சோதனை நடவடிக்கையின் போது மது போதையில் வாகனம் செலுத்திய 305 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் விசேட உத்தரவின் கீழ் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வார இறுதிநாட்களில்உணவகங்களில் மற்றும் இரவு விடுதிகளில் மதுபானம் அருந்திவிட்டு வாகனம் செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய இந்த சோதனை நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த இரண்டு தினங்களில் மாத்திரம் மதுபோதையில் வாகனம் செலுத்திய 527 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் காரியாலம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சாரதிகளுக்கு எதிராக வழக்கு தொடர மற்றும் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக ரத்துச்செய்ய உத்தரவொன்றை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தார். (இ-7)

# மக்களை அச்சுறுத்தும் குள்ள மனிதர்கள் மனித மாமிசத்திற்காக இரவில் ஆரம்பித்த வேட்டை

(கொழும்பு)

இலங்கையில் வாழ்ந்து வந்த, இன்னும் வாழ்ந்து வருவதாக நம்பப்படும் மனித மாமிசம்உண்ணும் "நிட்டாவா" எனப்படும் குள்ள மனிதர்கள் பற்றி அண்மைக்காலமாக அனைவராலும் பேசப்பட்டு வருகின்றது.



வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, இவர்கள் இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்து வந்ததாகவும், அதன் பின்னர் இவர்களின் இனம் பூமியில் இருந்து முற்றாக அழிந்து போனதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அண்மையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சில சம்பவங்களைத் தொடர்ந்து, இவர்களின் இனம் முற்றாக அழிந்துவிட்டதா அல்லது இவ்வினம் இன்னமும் இலங்கையில் வாழ்ந்து வருகிறதா என்பது பற்றி பெரும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஆரம்ப காலங்களில், நிட்டாவா எனப்படும் இந்த குள்ள மனித இனத்தவர்கள் வேடுவர்களுடன் ஒன்று சேர்த்து வேடுவ இனத்தை ஒட்டியே வாழ்ந்துவந்துள்ளனர். இருந்தபோதிலும், இந்த குள்ள மனித இனத்தின் அழிவுக்கும் வேடுவர்களே முக்கிய காரணமாகவும் கருதப்படுகின்றனர்.

இக்குள்ள மனிதர்களின் மனித மாமிசம் உண்ணும் பழக்கமே இவ்வாறு வேடுவர்கள் இவர்களை முற்றாக அழித்தொழித்தற்கான பிரதான காரணமாகக் கருதப்படுகிறது.

முன்பு குறிப்பிட்டது போல இக்குள்ள மனிதர்கள் தோற்றத்திலும், இயல்புகளிலும் மனிதர்களை ஒத்திருக்கவில்லை. மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இடையேயான ஓர் அரை-மனித தன்மையே இவர்களிடம் காணப்பட்டது.

தோற்றத்தினை பொறுத்தமட்டில், இவர்கள் மனித தோற்றத்தை விட குரங்குகளின் தோற்றத்தையே அதிகம் ஒத்திருந்தனர். அடர்ந்த உரோமங்கள் மற்றும் கூறிய நகங்களை கொண்டிருந்த இவர்கள் மனிதர்களைப் போல முதுகை நிமிர்த்தி நடமாடும்ஆற்றல்பெற்றிருந்தனர்.

சுமார் 3 அடி உயரத்தைக் இவர்கள் கொண்டிருந்தாலும் ஆண்களைவிட பெண்கள் உயரம் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். அதாவது பெண்கள் சுமார் 2 அடி உயரத்தினை மட்டுமே கொண்டிருந்தனர்.

இவர்களின்பிரதான உணவுகளாக உடும்பு, ஓணான், மான், மரை மற்றும் காட்டு எருமைகள் என்பன காணப்பட்டாலும், மனித மாமிசத்தை விரும்பி உண்ணும் பழக்கத்தினை கொண்டிருந்தனர். அதாவது, காட்டில் தனியாக உலாவித்திரியும் வேடுவர்கள் மற்றும் காட்டில் ஓடி விளையாடும் வேடுவர்களின் குழந்தைகளை கொன்று உண்பதை இவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இற்றைக்கு சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் வேடுவர்கள் குள்ள மனிதர்கள் அனைவரையும் பிடித்து ஓர் குகையினுள் அடைத்து தொடர்ந்து மூன்று நாட்களாக தீ மூட்டிக் கொளுத்தியதாகவும் சிலர் கூறுகின்றனர்.

இந்நிலையில் குள்ள மனிதர்கள் நடமாட்டம் தொடர்பான தகவல்கள் இலங்கையில் மீண்டும் பரவத் தொடங்கியுள்ளன. (இ-7)

# பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான கண்காட்சிக்கு பிரதமர் ரணில் விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் பொதுப் போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளான பெண்களின் மற்றும் யுவதிகளின் கதைகளை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டுள்ளார்.



சர்வதேச மகளிர் தினம் கடந்த வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. "அவளது பயணம்பாதுகாப்பானதா? "என்ற கருப்பொருளில் கொழும்பு நகர மண்டப மைதானத்தில் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக் கண்காட்சியானது ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து பொதுப்போக்குவரத்தில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தொல்பொருட்களைச் சேதப்படுத்தினால் ஐந்து இலட்சம் ரூபாய் அபராதம் 15 வருடங்கள் சிறைத்தண்டனை

(கொழும்பு)

தொல்பொருட்களுக்குச் சேதம் விளைவிப்பவர்களுக்கு விதிக்கப்படும் தண்டப் பணம் அதிகரிக்கப்படவுள்ளதாக, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பி.பி. மண்டாவல தெரிவித்துள்ளார்.

தொல்பொருட்களுக்கு ஏற்படும்சேதங்களைக் குறைக்கும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதன் பிரகாரம், இது வரை காலமும் 50 ஆயிரம் ரூபாவாக இருந்து வந்த தண்டப் பணம், ஐந்து இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, தொல் பொருட்களுக்குச் சேதம் விளைவிப்பவர்ளுக்கு வழங்கப்படும் சிறைத்தண்டனைக் காலமும் அதிகரிக்கப்படவுள்ளது.

இரண்டு வருடங்கள் அமுலில் இருந்து வந்த இச்சிறைத்தண்டனை, 5 முதல் 15 வருடங்கள் வரை அதிகரிக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் இது தொடர்பிலாக சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதை அடுத்தே, குறித்த தண்டப்பணங்களுக்கான திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

1940 ஆம் ஆண்டு இலக்கம் 9 இன் கீழான தொல்பொருள் கட்டளைச் சட்டம், இறுதியாக 1998 ஆம் ஆண்டு திருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தேகத்திற்கிடமாக நடமாடிய 6 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய 6 பேர் கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் இரவு நேரங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் நடத்தப்பட விசாரணைகளின் பின் கோப்பாய் பொலிஸார் குறித்த நபர்களை பொலீஸ் பிணையில் செல்ல அனுமதித்தனர். (இ-10)



கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலையில் கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை இராமகிருஷ்ண ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் இராமகிருஷ்ணரின் உருவப்படம் வைக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் இடம்பெறுவதையும் அதனைத் தொடர்ந்து மாணவர்களின் பஜனை இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- தாவடி செய்தியாளர்)

# கிளிநொச்சி தர்மபுரம் பிரதேச வைத்தியசாலை அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்

## அபிவிருத்திக்குழு வடக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர்

(கண்டாவளை)

கிளிநொச்சி தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு கோரிக்கை விடுத்துள்ளதுடன், இது தொடர்பான மகஜரையும் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது நிலையில் உள்ளதும் அதிகளவான நோயாளர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற ஒரு வைத்தியசாலையாகக் காணப்படும் தருமபுரம் வைத்தியசாலையைப் பல்வேறு தேவைப்பாடுகள் கொண்ட வைத்தியசாலையாகக் காணப்படுகின்றது.

இதனுடைய தேவைகள் தொடர்பில் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு வடக்கு மாகாண ஆளுநருக்குக் கையளித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான நோயாளர்கள் சேவை பெறும் இடங்களில் இரண்டாம் நிலையில் உள்ள இவ் வைத்தியசாலை அபிவிருத்தி மட்டத்தில் கீழ் நிலையில் உள்ளமை தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருகின்றது.

எனினும், புதிதாக அமைக்கப்பட்ட இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கான வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டபோதும், இதுவரை திறந்து வைக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதேவேளை தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற நோயாளர் விடுதிக்கான வேலைகளும் முழுமை பெறாமல் காணப்படுகின்றன என்பதனை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

எமது வைத்தியசாலையின் பொதுவிடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு, பிரசவ விடுதி என்பவற்றுக்கு மேதிகமாக வெளிநோயாளர் பிரிவு மற்றும் நாளாந்த கிளினிக் போன்றவற்றிலும் இரண்டு வைத்தியர்கள் மட்டுமே 24 மணிநேர சேவையை வழங்கி வருகின்றனர்.

எனவே இந்த வைத்தியர்கள் தொடர்ந்தும் கடமைபுரிவதால் அவர்களுக்கான வேலைப்பளு அதிகரித்துள்ளது.

இவ் வைத்தியசாலைக்கு புதிய வைத்தியர்களை நியமிப்பதற்கும் உபகரண வசதிகளை ஏற்படுத்தவும் ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இந்த வைத்தியசாலையின் குறைந்த பட்ச சோதனைகளான குருதிப்பரிசோதனை சிறுநீரகப்பரிசோதனை போன்ற சேவைகளை வழங்க தேவையான ஆய்வுகூட வசதிகளையும் அதற்கான உபகரணங்களையும் பெற்றுத்தருமாறும் வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களுக்கான தங்குமிட வசதி, மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் ஆளணியினருக்கான பற்றாக்குறை என்பவற்றை நீக்குமாறும் மேற்படி மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை இதர வசதிகளான பற்சிகிச்சைக்கூடம் அவசர சிகிச்சைப்பிரிவு, மருந்துக்களஞ்சியம், பிரேத அறை, வைத்தியசாலைக்கான அலுவலகம், போன்றவற்றை எதிர்காலத்தில் அமைத்துத்தருமாறு மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது

வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பில் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினால் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டதுடன், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பாளருக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் விபத்து; ஐவர் வைத்தியசாலையில்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் மூங்கிலாறு சந்திப்பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஐவர் காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இதன்போது ஆட்டோவும் உந்துருளியும் நேருக்கு நேர்மோதி விபத்துக்குள்ளானது. (2)

# நிலமீட்புப் போராட்ட மக்களை சந்தித்தனர் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள்



(மன்னார்)

தமது பூர்வீக நிலத்தைக் கோரி சிலாவத்தை கடற்படை முகாம் முன்பாக கொட்டகை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை மன்னார் பிரதேச சபையைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது.

இதன்போது நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் பிரதேச சபையூடாக ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதி அனுப்பி தமது பூர்வீக நிலத்தை மீட்டுத்தருமாறு கோரினர்.

இதற்கு அக் குழுவினர்கள் விரைந்து செயற்படுவதாக உறுதியளித்தனர். (2-286)

# வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்படுவது உறுதி-பெரமுன



(கொழும்பு)

அரசாங்கத்தின் இறுதி வரவு - செலவு திட்டத்தை தோற்கடித்து பாராளுமன்ற தேர்தலுக்கு செல்வோம். இவ்விடயத்தில் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

கண்டி நகரில் அண்மையில் இடம் பெற்ற அரசாங்கத்திற்கு எதிரான பேரணியில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் தொடர்பில் நாட்டு மக்கள் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த காலங்களில் அறவிடப்பட்ட வட்டி வீதத்தை விட நூற்றுக்கு 21 சதவீதம் வட்டி வீதம் ஒவ்வொரு துறைகளிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கை செலவுகளை குறைகளை குறைக்கும் புதிய திட்டங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் வெற்றி பெற்றால் அதன் தாக்கம் அடுத்த அரசாங்கத்திற்கும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே இந்த வரவு- செலவு திட்டம் தோற்கடிக்கப்படுவது உறுதியாக்கப்பட்டுள்ளது.

பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு ஆளும் தரப்பினரும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியுள்ளனர் என்றார். (2-7)

# சடலம் கண்டெடுப்பு

(திருகோணமலை)

ஹபரனை - திருகோணமலை பிரதான வீதி ஹதருஸ் கொட்டுவ பிரதேசத்தில் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சடலம் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலத்திற்கு அருகாமையில் விபத்துக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட குறித்த நபர் கடந்த சில தினங்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்க கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து ஹபரனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-7)

# பாவனைக்குதவாத கிழங்குகள் மீட்பு

(கொழும்பு)

மனித பாவனைக்கு உதவாத ஒருதொகை உருளைக்கிழங்குகள் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் பின்பக்க கிடங்கொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை நகர சபையின் சுகா தார பிரிவால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே, இந்த உருளைக்கிழங்குகளின் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறி த்த கிடங்கிலிருந்து 5 ஆயிரம் கிலோகிராம் பாவனைக்கு உதவாத கிழங்குகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

## சர்வதேச பெண்கள் தின நிகழ்வு

# கிளிநொச்சி பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு






(கிளிநொச்சி)

வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கத்தின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகள் கிளிநொச்சியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் குறித்த சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வின் முதல் அங்கமாக கிளிநொச்சி பேருந்து நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


அங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த மக்கள்,

மலையக மக்கள் தமது ஊதியத்திற்காக கோரிக்கை விடுத்து வருகின்றனர். தமக்கான ஆயிரம் ரூபா ஊதியம் வழங்க கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கை நியாயமானது. அங்குள்ள பெண்கள் அதிகாலை முதல் முழுநாளாக தம்மை அர்ப்பணித்து வேலை செய்கின்றனர். அவர்களுக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதேபோன்று வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தேடி நாடு திரும்பும் பெண்களுக்கான வாக்குரிமைகள் பறிக்கப்படுவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

வேலைவாய்ப்பு தேடி வெளிநாடுகளில் உள்ள பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தனர். அதேபோன்று நுண்கடனால் இன்றும் பெண்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ந்து போராட்டகாரர்கள் பேரணியாக கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் வரை சென்றனர். அங்கு சர்வதேச பெண்கள் தின மாநாடும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2)



தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி அலுவலகம் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆனந்தபுரத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. கட்சியின் கொடியை விக்னேஸ்வரன் ஏற்றி வைத்ததுடன், பெயர்ப்பலகையையும் திறந்து வைத்தார். (படங்கள்:-கண்டாவளை செய்தியாளர்)

# சிலாவத்துறையில் கடற்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி போராட்டத்தில் ஈடுபடும் மக்களை மனிதவுரிமை ஆணைக்குழுவினர் சந்திப்பு

(மன்னார்)

மன்னார் முசலி பிரதேசசபைக்குட்டபட்ட முத்து சிலாவத்துறையில் கடற்படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி நேற்று முன்தினம் 18 ஆம் நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களை மனித உரிமை ஆணைக்குழு வன்னி பிராந்திய இணைப்பாளர் எம்.ஆர்.பிரியதர்ஷன, மனித உரிமை சட்டத்தரணி வசந்தராஜ், மன்னார் உப அலுவலர் ரஸானா முசாரக், உள்ளக ஆய்வாளர் செல்வி.எஸ்.ஜெயந்தினி ஆகியோர் சென்று கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பு நேற்று முன்தினம் முற் பகல் 10.15 மணியளவில் சிலாவத்தை துறை கடற்படை முகாம் முன்பாக அமைக்கப்பட்டுள் போராட்ட கொட்டகையினுள் இடம் பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மனித உரிமை ஆணைக் குழுவினர் மக்களின் பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது அம்மக்கள், எமது பூர்வீக நிலம் எமக்கு வேண்டும் நாம் வாழ்ந்த சாலைகளில் பொருளாதாரத்தை எட்டக் கூடிய கட்டடங்கள் அமைக்கப்பட டுள்ளன.

இவற்றை கடற்படையினரிடம் இருந்து பெற்றுத் தர வேண்டும். எமக்கு மாற்றுக்காணிகள் தேவையில்லை. தந்தாலும் ஏற்க மாட்டோம். எமது சொந்த வாழ் விடமே தேவை. நாம் பூர்வீகமாக வாழ்ந்த இடமே எமக்கு விடுவிக்கப்பட வேண்டும்.

அத்துடன் காணி விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும். அத்துடன் இக் கொட்டகையினுள் இருப்பதற்கு போதிய பாதுகாக்கு இல்லையெனவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தருமாறு கேட்டுக்கொண்டனர்.

இவற்றையெல்லாம் கேட்டறிந்த குழுவினர் அம்மக்கள் மத்தியில் கருத்துக் கூறுகையில், இது தொடர்பில் சிலாவத்துறை கடற்படை முகாம் அதிகாரிகளுடன் கதைப்பதாகவும் கடற்படைத்தளபதியுடன் காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாடுவதாகவும் கூறி 36 ஏக்கருக்கான வரை படத்தையும் பெற்றுச் சென்றனர்.

அதன் பின்னர் இக்குழுவினர் கடற்படை முகாமிற்கு சென்றபோது, அங்கு அம்முகாம் கடற்படை அதகாரி இல்லை என குறிப்பிட்டதுடன் இந்த காணி போராட்ட மக்களுக்கு பாதுகாப்பு தொடர்பாக சிலாவத் துறை பொலிஸாரிடமும் எடுத்துக் கூறினர்.(2-285)




# பயன்பாடற்ற நிலையிலுள்ள காணிகளை பொறுப்பேற்று குத்தகைக்கு விட தீர்மானம்

## புன்னைநீராவி கிராம அபிவிருத்திச் சங்கம் தீர்மானம்

(கண்டாவளை)

கிளிநொச்சி புன்னை நீராவிப்பகுதியில் குடியிருப்பு காணிகளை பல வருடக்கணக்காக உரிமையாளர்களினால் துப்புரவு செய்யாமல் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற பன்னிரண்டுகாணிகளைபுன்னை நீராவி கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பெடுத்து அதனை கரைச்சிப் பிரதேச சபை ஊடாக துப்புரவு மேற்கொண்டு நீண்ட கால குத்தகைக்கு பயனாளிகளுக்கு வழங்கும் தீர்மானம் ஒன்று கிராம சேவையாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் புன்னைநீராவி கிராம அபிவிருத்திச்சங்கத்தினரால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் குமாரசாமி கோகுலன், பல காணிகள் பல வருடக்கணக்காக துப்புரவு செய்யப்படாமல் பற்றைகள் வளர்ந்து அயலில் வசிக்கும் பல குடும்பங்கள் பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றார்கள்.

குரங்குகளின் சரணாலயமாக காட்சியளிக்கும் இக் காணிகளுக்குள் மது பாவனை உள்ளிட்ட சமூக விரோத செயல்கள் நீண்ட காலமாக இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் தனக்கு தெரியப்படுத்தியதற்கு இணங்க காணியின் உரிமையாளர்கள் கூட தங்கள் காணிகளில் வசிக்க முடியாமல் அயல் பகுதிகளில் வசிப்பதால் இம்முடிவை தான் மிக குறுகிய நாளில் முன்னெடுத்து மக்கள் பயனடையும் வகையில் இச் செயற்பாட்டை எடுக்க உள்ளதாக கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் கு.கோகுலன் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை விடுமுறை நாட்களில் திறந்திருக்கும்

## பணிப்பாளர் காண்டீபன் தெரிவிப்பு

(பரந்தன்)

பொது மக்களின் நலன் கருதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு ஞாயிறு உள்ளிட்ட விடுமுறை நாட்களில் நண்பகல் 12 மணி வரை திறக்கும் என பணிப்பாளர் காண்டீபன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் விடுமுறை நாட்களில் முற்பகல் பத்து மணி வரை வெளி நோயாளர் பிரிவில் பொது மக்கள் சிகிச்சை பெற்று வந்தனர்.

இதனால் பெருமளவான மக்கள் சிகிச்சையை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் பொது மக்களின் கோரிக்கைக்கு அமைவாக நண்பகல் 12 மணிவரை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்குவது என தீர்மானிக்கப் பட்டுள்ளன.

எனவே எதிர்வரும் காலங்களில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விடுமுறை நாட்களில் நண்பகல் 12 மணிவரை பொதுமக்கள் வெளிநோயளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என மாவட்ட வைத்திய சாலையின் பணிப்பாளர் காண்டீபன் அறிவித்துள்ளார். (2-312)

# கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் விஞ்ஞானவாரம் இன்று தொடக்கம் 14 ஆம் திகதி வரை இடம் பெறும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இன்று திங்கட் கிழமை தொடக்கம் எதிர் வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை வரை விஞ்ஞான வாரம் கல்லூரி வளாகத் தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியர் செல்வி ச.சாரங்கா தலைமையில் நடைபெறும்.

இதற்கமைவாக முதலாம் நாள் நிகழ்வாக இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்காட்சி இடம் பெறும். இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.பிரதீபன் கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கண்காட்சி இடம்பெறும். இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராஜா கலந்து கொள்வார்.

மூன்றாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறும். இதில் விஞ்ஞான விநாடி வினாப் போட்டி நடைபெறும்.

நான்காம் நாள் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு விஞ்ஞான தினமும் பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ஜோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினர்களாக sjc87initiative இணைப்பாளர் செல்வி மு.டேகலா, விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.பிரதீபன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை விஞ்ஞான ஆசிரியர் அ.சிவஞானசுந்தரம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபரும் வட்டக்கச்சி மகா வித்தியாலய ஆசிரியருமான பு.ஜெகதீஸ்வரன், விஞ்ஞான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான க.குகதாஸ், து.கோணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-10)



கலை இலக்கியச்செயற்பாடுகளை மையமாகக்கொண்டு இயங்கி வரும் தமிழ் மாமன்றம் வருடாந்தம் நடத்தும் பண்பாட்டு பெருவிழாவான "தமிழ்மாருதம்" வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது போது..... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்.)




# ஏழு பேரின் விடுதலையை வலியுறுத்தி சென்னையில் மனித சங்கிலிப்போராட்டம்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி மனித சங்கிலிப் போராட்டம் சென்னையில் நடைபெற்றது.

இந்த மனித சங்கிலி போராட்டம் சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.


முருகன் சாந்தன் பேரறிவாளன் நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயஸ் ஜெயகுமார்





இப்போராட்டத்தில் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் பங்கேற்றதுடன், தொல்.திருமாவளவன், திராவிடர் கழகம், இடதுசாரிகள், திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் இஸ்லாமிய அமைப்புக்கள் உள்ளிட்ட பல அமைப்புக்கள் இதில் பங்கேற்றன.

மேலும், பா.ம.க.வின் அன்புமணி ராமதாஸ், அ.ம.மு.க.வின் வெற்றிவேல், நடிகர்கள் சத்யராஜ், பொன்வண்ணன், இயக்குநர் வெற்றிமாறன் உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர்.

அதேபோல், புதுச்சேரி, சேலம், மதுரை, கோவை உள்ளிட்ட இடங்களிலும் பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் சார்பில் மனித சங்கிலி போராட்டங்கள் நடைபெற்றன.

7 பேரின் விடுதலையை வலியுறுத்தி சென்னை உட்பட 7 நகரங்களில் மனித சங்கிலி போராட்டத்துக்கு பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் அழைப்பு விடுத்திருந்தமைக்கு அமைய இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## 'புல்வாமா தாக்குதல் விவகாரம்'

# மசூத் அசாரை விடுவித்தது யார்?

## பிரதமர் மோடியிடம் ராகுல் கேள்வி

(டில்லி)

தீவிரவாதி மசூத் அசாரை விடுவித்தது யார் என்பதை பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு சொல்வாரா? என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.



கர்நாடக மாநிலம் ஹாவேரியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மக்களவைத் தேர்தல் பிரசாரத்தை நேற்று முன்தினம் தொடங்கினார். இப்பிரசாரப் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி உரையாற்றியதாவது,

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 5 ஆண்டுகளாக வெறும் அறிவிப்புகளை வைத்து மக்களை ஏமாற்றி வருகிறார். கறுப்பு பண மீட்பு, பொதுமக்கள் வங்கிக் கணக்கில் ரூ.15 இலட்சம், வேலை வாய்ப்பு, விவசாய கடன் தள்ளுபடி என அவர் அறிவித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. ஆனால் பெரும் பணக்காரர்களின் வங்கிக் கடனை தள்ளுபடி செய்திருக்கிறார். பண மதிப்பு நீக்கத்தால் நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர் என அனைவரும் வங்கிகளின் வாசலில் வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டது. கோடிக்கணக்கான சொத்துக்களை வைத்துள்ள அனில் அம்பானி, அதானி, விஜய் மல்லையா, நீரவ் மோடி என யாரும் வரிசையில் நிற்கவில்லை.

பாகிஸ்தான் மீதான தாக்குதலை பா.ஜ.க. அரசியலாக்கி வருவது எடியூரப்பாவின் பேச்சு மூலம் வெளிப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கும் மோடிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதில் இராணுவத்தினர்தான் உயிரைக்கொடுத்து போராடினார்கள். ஆனால் பா.ஜ.கவினர் அதனை அரசியல் லாபத்துக்காக பயன்படுத்திக் கொள்வது கண்டிக்கத்தக்கது.

கந்தகார் விமானக் கடத்தலின்போது பா.ஜ.க. தலைமையிலான அப்போதைய அரசு, ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் தலைவர் மவுலானா மசூத் அசாரை விடுவித்தது. அவரை விடுவிக்காமல் இருந்திருந்தால் புல்வாமாத் தாக்குதலே நடந்திருக்காது.

புல்வாமாத் தாக்குதலுக்கு காரணமான தீவிரவாதி மசூத் அசாரை விடுவித்தது யார் என்பதை நாட்டு மக்களுக்கு மோடி சொல்வாரா? புல்வாமா தாக்குதலை வைத்து கர்நாடகாவில் 22 இடங்களில் பாஜக வெல்லும் என எடியூரப்பா கணக்குப் போடுகிறார். 22 அல்ல, 2 இடங்களில் கூட பா.ஜ.க. வெற்றி பெறாத நிலையை உருவாக்க வேண்டும் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மேலும் தெரிவித்தார். (7)

# நிக்கராகுவா மக்களின் போராட்டம் வெற்றி; தேர்தல் நடத்த அரசாங்கம் இணக்கம்

(மனாகுவா)

நிக்கராகுவா அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் சனிக்கிழமை அரசாங்கம் இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தேர்தல் நடத்துதல், ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை வெளிவிடுதல், எதிர்க்கட்சியோடு பேச்சுவார்த்தை நடத்தி நாட்டில் நிலவும் தசாப்த கால அரசியல் பிரச்சினையைத் தீர்த்தல் ஆகியவற்றை உள்ளடக்கி குறித்த அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த 3 தசாப்தமாக நிக்கராகுவா நாட்டில் நிலவி வரும் அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறும் தேர்தல் நடத்துமாறும் கோரி மக்கள் போராடி வந்தனர். போராட்டத்தின் போது 320 போராளிகள் கொல்லப்பட்டதோடு பலர் காயங்களுக்கு உள்ளாகி இருந்தனர். நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் எதிர்க்கட்சியுடனான பேச்சு வார்த்தையில் அரசாங்கம் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளது. இதேவேளை அரசாங்கத்தின் அறிக்கை வெளியாகியுள்ள போதும் கோரிக்கைகளை நிறைவேற்ற தாமதமாகலாம் என அந்நாட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. (7)

# ஏமனில் உள்நாட்டு யு

# ஒரே ஆண்டில் 4 ஆயிர

## ஐ.நா.அறிக்கை

(சனா)

ஏமனில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த ஆண்டில் மாத்திரம் 4,800 பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "உலக அகதிகள் அமைப்பின் சார்பில் தரவு ஒன்று வெளியிடப்பட்டது.

அதில் கடந்த 2018 ஆம் ஆண்டில் ஏமனில் நடக்கும் உள்நாட்டுப் போர் காரணமாக 4,800 பொது மக்கள் இறந்திருக்கிறார்கள். ஒவ்வொரு வாரமும் பொதுமக்களில் 100 பேர் உயிரிழந்திருக்கின்றனர் அல்லது காயமடைந்திருக்கின்றனர்"



என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனில் நடந்து வரும் உள்நாட்டுப் போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை நீண்ட காலமாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் பல்வேறு பேச்சு

# திமிங்கலம் மீது படகு

# 100 பேர் படுகாயம்; 13

(டோக்கியோ)

ஜப்பானில் திமிங்கலம் மீது படகு மோதியதில் 100 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவரில் சிலர் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர்.

ஜப்பானில் சொகுசு படகு ஒன்று 125 பேருடன் நிகாடா துறைமுகத்தில் இருந்து சாடோ தீவை நோக்கி சென்று கொண்டிருந்தது.

மிகவும் வேகமாக நடுக்கடலில் அந்த படகு சென்று கொண்டிருக்கும்போது திடீரென திமிங்கலத்தின் மீது பயங்



# தீவிரவாதத்தால் அனு

# இனியும் நாம் பொறு

## தீவிரவாதிகளுக்கு

(டில்லி)

தீவிரவாதத்தால் நாங்கள் அனுபவித்தது போதும், இனியும் இந்த தேசம் பாதிக்கப்படும்வகையில் வைத்திருக்க முடியாது, இனி பொறுத்துக் கொள்ளவும்மாட்டோம் என்று பிரதமர் மோடி கடும் எச்சரிக்கை விடுத்தார்.

மத்திய தொழிற்பிரிவு பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டு 50ஆவது ஆண்டு விழா இன்று உத்தரப்பிரதேசம் காஜியாபாத்தில் நடந்தது.

இந்த பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அப்போது, மத்திய தொழிற்பிரிவு பாதுகாப்புப் படையினர், எல்லைப் பாதுகாப்பு படையினர் (பி.எஸ்.எப்.), இந்தோ திபெத் எல்லை பொலிஸ் படை, ஆகியோரின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக்கொண்டார். அதன் பின் பிரதமர் மோடி உரையாற்றியதாவது,

இந்த தேசம் புல்வாமா, உரி போன்ற தீவிரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்டதெல்லாம் போதும், போதும். தீவிரவாதிகள் நமக்கு தொல்லை கொடுத்தாலும் இனியும் பாதிக்கப்படும் வகையில் நாம் இருக்க முடியாது.

நமது அயல் நாடு விரோதத்துடன் நம்மை நோக்கும் போது, உள்நாட்டில் சில சக்திகள் அண்டை நாட்டுக்கு ஆதரவளித்து, சதித்திட்டம் தீட்டும் நிலையில், மத்திய தொழிற்பிரிவு படையினர் போன்ற பாதுகாப்புப் படையினர் மிகவும் முக்கியமானவர்கள்.

நமது அயல் நாடு (பாகிஸ்தான்) மிகவும் விரோதத்துடன் இருந்தாலும், அவர்கள் நம்முடன் போர் புரியும் அளவுக்குத் தகுதியில்லாத



# வெளிநாடு

## யுத்தம் காரணமாக
## யிரத்து 800 பேர் பலி
### கையில் தகவல்



வார்த்தைகளுக்குப் பிறகு போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அரசும், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த மாதம் மீண்டும் ஒப்புக் கொண்டனர்.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிப்தி மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இதில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயற்படுகிறது. ஹவுதி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

சவுதி அரேபியா தொடர்ந்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானோ கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

ஏமன்அரசுடன்இணைந்து சவுதி நடத்தும் மனிதாபிமானமற்ற தாக்குதலை கண்டித்து ஐக்கிய நாடுகள்சபை கண்டனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## கு மோதிய விபத்தில்
## 13 பேர் கவலைக்கிடம்




கரமாக மோதியது.

இதனால் பயணிகள் தடுமாறினார்கள். முன்னால் இருந்த சீட் மீது பல பயணிகள் மோதினர். சிலர் சீட்டில் இருந்து கீழே விழுந்தனர். இதனால் 100 பயணிகள் படுகாயம் அடைந்தனர். இதில் 13 பேர் மிகவும் கவலைக்கிடமாக உள்ளனர்.

சொகுசு படகைச் சேர்ந்தவர்கள் திமிங்கலம் மீது மோதியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று கூறுகின்றனர். (7)

## னுபவித்தது போதும்
## வுத்திருக்கமாட்டோம்
### மோடி எச்சரிக்கை



வர்கள். எல்லை கடந்து உள்நாட்டில் இருந்து அண்டை நாட்டுக்கு ஆதரவும் அளிக்கப்பட்டு, சதித் திட்டமும் வகுக்கப்படுகிறது.

இதுபோன்ற கடினமான நேரங்களில் நாட்டின் பாதுகாப்பு என்பது சவாலான விடயம்.

ஆனால், அதை சி.ஐ.எஸ்.எப். படையினர் சிறப்பாகச் செய்து வருகிறார்கள், உங்களின் சாதனை குறிப்பிடத்தகுந்தது. சுதந்திர இந்தியாவின் பல்வேறு கனவுகளை நிறைவேற்ற சி.எஸ்.ஐ.எப். முயற்சிகள் நடவடிக்கைகள் முக்கியமானது.

வி.ஐ.பி. கலாசாரம் சில நேரங்களில் தேசத்தின் பாதுகாப்பு முறைகளில் பல்வேறு தடைகளை ஏற்படுத்திவிடுகிறது. இதனால், சில நேரங்களில் அரசு குறிப்பிடத்தகுந்த முடிவுகள் எடுத்து, கடினமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார். (7)

## நைஜீரியாவில் பரவும் லசா காய்ச்சல் பலி எண்ணிக்கை 95 ஆக அதிகரிப்பு

(அபுஜா)

நைஜீரியாவில் வேகமாக பரவி வரும் லசா காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 95 ஆக அதிகரித்துள்ளது.

உலகின் மிக மோசமான நோய்களில் ஒன்றான லசா காய்ச்சல் கடந்த ஆண்டு தொடக்கத்தில் திடீரென வேகமாக பரவி, 23 நாடுகளை தாக்கி, 171 பேரை கொன்றது. இந்த நோய் நைஜீரியாவில் மீண்டும் பரவி வருகிறது.

நைஜீரியாவில் கடந்த இரு மாதமாக லசா காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. லசா காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 95 ஆக அதிகரித்துள்ளது. நைஜீரியாவின் 21 மாநிலங்களில் லசா காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தேசிய மையக் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லசா வைரசானது மார்பர்க் மற்றும் எபோலா எனும் இரண்டு கொடிய வைரஸ்களின் குடும்பத்தைச் சார்ந்தது. இதனால் கடுமையான காய்ச்சல், வாந்தி மற்றும் இரத்தச் சோகை போன்ற பிரச்சினைகள் ஏற்படும். லசா எனும்பெயர்வடக்குநைஜீரியாவின் லசா நகரத்திலிருந்து வந்ததாகும். இந்நோய் 1969 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.

இந்த வைரஸ் எலிகள் மூலமாகவும், இந்நோய் பாதிக்கப்பட்டவர்களின் தொற்றினாலும் பரவ அதிக வாய்ப்புள்ளது.

மேலும் இந்நோய் பரவுவதை தடுக்க சுகாதாரத்துடனும் எலிகளின் தொற்று இல்லாமலும் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## விடுதியில் தாக்குதல் 15 பேர் உயிரிழப்பு

(மெக்சிக்கோ சிற்றி)

மெக்சிக்கோவில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் குறைந்தது 15 பேர் மரணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலையில் மெக்சிக்கோ குவாஞ்சூடா மாகாணத்தில் உள்ள ஆண்களுக்கான விடுதி ஒன்றில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக உள்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

3 வன்களில் வந்திறங்கிய கும்பல் ஒன்று சரமாரியாக நடத்திய வெடி குண்டு தாக்குதலில் தீப்பற்றியதோடு சம்பவ இடத்தில் இருந்த 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் வைத்தியசாலைக்கு எடுத்து சென்ற நிலையில் உயிரிழந்துள்ளனர். தாக்குதலை நடத்தியவர்கள் தொடர்பில் இன்னும் எந்த தகவலும் கிடைக்கவில்லையென மெக்சிக்கோ அரச அலுவலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சம்பவம் இடம்பெற்ற நகரமான சலமான்காவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து திருட்டு கும்பலொன்று அண்மையில் எண்ணெய் திருடிய விடயமும் இச்சம்பவத்தில் தொடர்புபடுத்தி பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## விமான விபத்தில் 12 பேர் உயிரிழப்பு



(கொலம்பியா)

கொலம்பியாவில் நடந்த விமான விபத்தில் 12 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொலம்பியாவில் உள்ள சான் கார்லோஸ் டி கரோரா என்ற பகுதியில் டக்லஸ் டிசி3 விமானம் விபத்துக்குள்ளானது. மேலும் இதில் பயணம் செய்த 12 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்துக்குள்ளான விமானம் விபத்து நடப்பதற்கு முன் அவசர நிலையை அறிவித்ததாகத் தகவல்களில் தெரியவந்துள்ளன. (7)

### வெனிசுவெலாவில் மின்தட்டுப்பாடு

## டயாலிசிஸ் செய்ய முடியாமல் 15 சிறுநீரக நோயாளிகள் பலி

(கராகஸ்)

அரசியல் பிரச்சினையால் தவித்து வரும் வெனிசுவெலாவில் கடும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் டயாலிசிஸ் செய்ய முடியாமல் 15 நோயாளிகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

வெனிசுவெலாவில்நிகோலஸ் மதுரோ ஜனாதிபதியாக இருக்கிறார். இவருக்கு மக்களிடம் எதிர்ப்பு உள்ளது. எனவே எதிர்க்கட்சி தலைவர்ஜுவான்கெய்டோ தன்னை இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டார்.

அவருக்கு அமெரிக்கா உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இதனால்வெனிசுவெலாவில் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை நிலவுகிறது. வெனிசுவெலா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

அதன் காரணமாக வெனிசுவெலாவில் பொருளாதாரம் மிகவும் சரிந்துள்ளது. அத்தியாவசிய உணவு பொருட்கள் கிடைக்கவில்லை. மின்சார உற்பத்தியிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகள் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கி கிடக்கின்றன. குறிப்பாக மேற்கு மாகாணங்களான பரினாஸ், தசீரா, ஷூலியா உள்ளிட்ட பகுதிகளில் மின்சாரம் இல்லை. கராகஸ், மிராண்டா, வர்காஸ் ஆகிய மாகாணங்களில் மின்சாரம் விட்டுவிட்டு வருகிறது.

மின் தட்டுப்பாடு காரணமாக சிறுநீரக நோயாளிகளுக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிக்க முடியவில்லை. இதனால் கடந்த 2 நாட்களில் 15 சிறுநீரக நோயாளிகள் உயிரிழந்துள்ளனர். இந்த தகவலை சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (7)

## பாதுகாப்புப் படையினர் தாக்குதல் பயங்கரவாதிகள் 6 பேர் உயிரிழப்பு



(பக்தாத்)

ஈராக்கில் பாதுகாப்பு படைகள் நிகழ்த்திய அதிரடி தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 6 பேர் பலியாகி உள்ளதாகவும், 7 பதுங்கு மிடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

தியாலா மாகாணத்தின் தலைநகரான பாகுபா நகரில் இருந்து 2 கி.மீ. வடகிழக்கில் உள்ள ஹாவத் அல் வக்ப் பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாதுகாப்பு படைகள் கடுமையான தாக்குதல்களை நடத்தி வந்தன.

இந்தத் தாக்குதல் நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது.

இதில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 6 பேர் பலியாகி உள்ளதாகவும், 7 பதுங்குமிடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கள் கூறுகின்றன.

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான இந்த நடவடிக்கையில் இராணுவம் மாகாண அதிரடிபொலிஸ் படையினர், துணை இராணுவத்தினர் கூட்டாக ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது. (7)

# ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் பட்ஜெட்

## அத்துரலிய தேரர் ஐ.தே.க. மீது விமர்சனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த வரவு- செலவுத் திட்டம் தேசிய உற்பத்தியை உருவாகி நாட்டைப் பலப்படுத்தும் வரவு- செலவுத் திட்டம் அல்ல. மாறாக ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்தும் சர்வதேச நிறுவனங்களை திருப்திப்படுத்தவுமே முன் வைக் கப்பட்டுள்ளது என எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டுடன் இந்த ஆட்சியையும் விரட் டியடித்து மாற்றுப்பயணம் ஒன்றை உருவாக்க வேண் டும் எனவும் அவர் தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வரவு- செலவுத் திட்ட இர ண்டாம் வாசிப்பு மீதான நான்காம்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டை நாமே உருவாக்கிக்கொள்ள வாய்ப் புக்கள் இருந்தும் அதனைக் கருத்தில் கொள்ளாது வெளி நாட்டு நலன்சார் வரவு–செலவு திட்டத்தையே ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்துள்ளது.


இத்தனை காலமாக மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை நாம் விமர்சித்தோம். ஆனால் இந்த அரசாங்கமும் அதே பாதையில் தான் பயணித்து நாட்டை நாசமாக்கிவிட்டது. எம்மால் மீள செலுத்த முடி யாத அளவிற்கு கடன் பெறப் பட்டு விட்டது. கடன் சுமை 84 வீதமாக அதிகரித்துள் ளது.

தோட்டத்தொழிலாளர் பிரச்சினையை எடுத்துப் பார்த்தால் அவர்களின் வாழ் க்கை மிகவும் மோசமா னதாக அமைந்துள்ளது. அவர்களின் லயன் வீடு களை நீக்கிவிட்டு பாதுகாப் பான வீடுகளை உருவாக் கிக்கொடுக்க வேண்டும்.

150ஆண்டுகளுக்கு முன் னர் நடப்பட்ட தேயிலை செடிகள் தான் இன்றும் உள்ளன. அதனை பாது காக்க எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை. இந்த அரசாங்கம் மிகவும் மோசமானது.

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசிய கட்சி முன்வைத் துள்ள வரவு-செலவு திட் டமே இப்போது முன்வைக் கப்பட்டுள்ளது.

இந்த ஆட்சியில் அனை த்துமே தனியார்மயப்படுத் தப்பட்டு விட்டது. இந்த ஆட் சிக்கு எதிராக மக்கள் ஒன் றிணைந்து விட்டனர். தனி



யார் மயப்படுத்தல் என்பது ஐக்கிய தேசிய கட்சி ஆட் சியில் மட்டுமல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி கால த்திலும் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் தான் தொழிற் சாலைகள் பல தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள்எவருடனும்நாட்டை முன்னெடுத்து கொண்டு செல்ல முடியாது. சிங்கப்பூர், தாய்லாந்து உடன்படிக்கை மூலமாக நாட்டினை விற்று விட்டனர்.

ஆகவே இந்த ஆட்சி யையும் நிராகரித்து மாற் றிப் பயணம் ஒன்றை நாம் உருவாக்கவேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)

# சுற்றுலா மற்றும் பௌத்த நடவடிக்கைக்காக இலங்கை வருபவர்களுக்கு இலவச விசா



(கொழும்பு)

சுற்றுலா மற்றும் பௌத்த சமய நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு விஜயம் செய் வதில் பல நாடுகளுக்கான விசா நடைமுறையை நீக்கு வதற்கு அரசாங்கம் தீர்மா னித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள தாக ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன தெரிவித் தார்.

கடுவெலயில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன் றில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் சுற்றுலா கைத்தொ ழில் அபிவிருத்திக்காகவும் பௌத்த சமய எழுச்சிக்கா கவும் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக தெரி வித்துள்ளார்.

கம்பூச்சியாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் மேற் கொள்ளும்போது விசா பெற் றுக்கொள்வது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து மகாசங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் சுற்றுலா மற்றும் பௌத்த சமய நட வடிக்கைகளுக்காக நாட்டு க்கு விஜயம் செய்யும் கம் பூச்சியாவிற்கும் விசா நடை முறையை நீக்கி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரி வித்தார். (இ-7)

# இரத்தினக்கற்களை மீள் ஏற்றுமதி செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு-ரெஜினோல்ட்

(கொழும்பு)

இரத்தினக்கற்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து மீள் ஏற்றுமதி செய்யும் வேலை த்திட்டம் ஒன்றை ஆரம்பிக் கவுள்ளதாக இரத்தினக்கற் கள் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபையின் தலைவர் ரெஜினோல்ட் கூரே தெரி வித்தார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பட்டை தீட்டப்படாத இரத் தினக்கற்களை இலங்கை யில் மேம்படுத்துவதன் ஊடாக பாரியளவான வரு மானம் ஈட்ட முடிவதாக அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மேதைகளின் மறதி

ஒரு பெரிய தத்துவப் பேராசிரியர்.

தினமும் காலையில் வோக்கிங் போயிட்டு வருவது பழக்கம்.

ஒரு நாள் மிகவும் தூரம் நடந்து போய்விட்டார்.திரும்பி வருகின்ற பொழுது மிகவும் களைத்து யோய்விட்டார். கையிலே வோக்கிங் ஸ்டிக் இருக்கின்றது. அதன் துணையாலே மெதுவாக வீட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றார்.வரும் போதே மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டார்.

நேராக வீட்டுக்குப் போக வேண்டியது.. அறையிலே நுழைய வேண்டியது வோக்கிங் ஸ்டிக்கை சுவரின் மூலையே வைக்க வேண்டியது. பொத்துன்னு படுக்கையிலே விழுந்து ஆனந்தமாக ரெஸ்ட் எடுக்க வேண்டியது! இது தான் அவர் திட்டம்.

திட்டம் எல்லாம் சரிதான்! அதை நிறைவேற்றுகின்ற பொழுது தான் ஒரு சின்ன குழப்பம் ஏற்பட்டுப் போய்விட்டது! வேறு ஒன்றும் இல்லை! இவர் நேராக உள்ளே போனார்! பெட்ரூமுக்குப் போனார். கையில் இருந்த வோக்கிங் ஸ்டிக் படுக்கையிலே வைத்தார். இவர் நேராக போய் சுவரின் மூலையிலே சாய்ந்து குச்சி மாதிரி விறைப்பாக நின்று கொண்டார்.

தற்செயலாக அந்தப் பக்கம் வந்த அவர் மனைவி இதைப் பார்த்து பயந்து போனார். ஐயையோ என்னாச்சு உங்களுக்கு ? என்று அலற ஆரம்பித்தார்.

அவர் மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு சொன்னார். " சத்தம் போடாதே! பேசாமல் இரு! வேறு ஒன்றுமில்லை நடந்தது களைப்பா இருந்தது! அது தான் வந்தவுடனே குச்சியை சுவற்றிலே சாத்தி வைத்துவிட்டு நான் கட்டிலில் படுத்து சௌகரியமாக ரெஸ்ட் எடுத்துக் கிட்டிருக்கேன்! அப்படி என்றார். அந்த அம்மாவுக்கு சிரிப்பு தாங்கவில்லை! இது எவ்வளவு பெரிய ஞாபக மறதி பாருங்கள்!

"இது வந்து நகைச்சுவைத் துணுக்கு இல்லை! "

நிஜமாகவே நடந்த சம்பவமாம்!

மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கு! மேதைகளிலே பல பேர் இப்படித்தான் ஞாபக மறதிக்காரர்களாக இருந்திருக்கிறீர்கள்!

**Thomas Huxlay-** புகழ் பெற்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி இவரை இன்னொரு ஊர்லே **Lecture** செய்வதற்கு கூப்பிட்டிருந்தார்கள். இவரும் புறப்பட்டு ஒரு ரயிலிலே போய்க்கொண்டிருந்தார். ரயில் மிகவும் லேட்டாக போய்ச் சேர்ந்தது.

இவர் அவசரமாக ரயிலை விட்டு இறங்கி ஓடி அங்கே நின்று கொண்டிருந்த ஒரு குதிரை வண்டியிலே ஏறினார். வேகமாபோ! என்று கத்தினார். கோச் ஓடுபவரும் குதிரையை விரட்ட ஆரம்பித்தார். மிகவும் தூரம் போனதுக்கு அப்புறம் ஒரு **Crossing** வந்தது!

" சேர்! எந்த பக்கம் திரும்ப வேண்டும் " என்று கேட்டார்.

அப்பத்தான் இவரு முழிக்க ஆரம்பித்தார்! எங்கே போக வேண்டும் என்பதை மறந்துவிட்டார்!

வண்டியிலே ஏறுகின்ற பொழுது எங்கே போக வேண்டும் என்று சொன் னேன்? அப்படி என்று வண்டிக்காரர் கிட்டையே கேட்டார்.

" சேர்! நீங்க அதெல்லாம் ஒன்றும் சொல்லலே வேகமாக ஓடு என்றீர்கள். ஓடினேன் அவ்வளவு தான் அப்படி என்றார் அவர்.

அதற்குப் பிறகு என்ன ஆகிவிட்டது என்று தெரியவில்லை.

ஜன்ஸ்டீன் ஒரு சமயம் பாரீசுக்குப் போனார். ஒரு பெரிய ஆடம்பரமான ஹோட்டலில் தங்கினார். மாலைவேளை ஊரை சுத்திப் பார்க்க வேண்டும் என்று ஒரு ஆசை. மெதுவாக ஹோட்டலைவிட்டு இறங்கி தெருவிலே நடக்க ஆரம்பித்தார். இப்படி.. வேடிக்கை பார்த்துக் கொண்டே அவர் பாட்டுக்கு மிகவும் தூரம் போய்விட்டார். திரும்பி வருவதற்கு வழி தெரியவில்லை. அது மட்டுமல்ல அவர் தங்கியிருக்கின்ற ஹோட்டல் எது என்பதையும் மறந்துவிட்டார்.

வழியிலே போகிறவர்கள் வருகின்றவர்களையெல்லாம் நிறுத்தி சேர் நான் தங்கியிருக்கின்ற ஹோட்டல் எது என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்க ஆரம்பித்துவிட்டார். அவர்களுக்கு எப்படி தெரியும்? எல்லோரும் ஒரு மாதிரியாக இவரைப் பார்த்துவிட்டு விலகிப் போக ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒரு கிண்டல்கார ஆசாமி இவரைப் பார்த்து" அது சரி... உங்க பேரு என்ன வென்று உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா?" என்று விளையாட்டாக கேட்டார்.

உடனே இவரு சீரியஸா " அது எனக்கு ஞாபகம் இருக்கின்றது ஜன்ஸ்டின்" அப்படி என்றார்.

அப்பொழுதெல்லாம் இவர் பேர் உலகம் முழுவதும் தெரியும் அவ்வளவு புகழ் பேரைக் கேட்ட உடனே அந்த ஆள் இவருகிட்ட மன்னிப்பு கேட்டுக் கொண்டு பொலிஸ் உதவியோட இடத்தைக் கண்டுபிடித்து.. கூடவே கொண்டு போய் ஹோட்டலில் விட்டுவிட்டு வந்தாராம்.

இது மாதிரி பெரிய மேதைகளுக்குத் தான் ஞாபகமறதி என்பது இல்லை.

சாதாரண ஆட்களுக்கும் இது இருக்கின்றது உண்டு.

எங்கள் ஆள் ஒருத்தர் அவரிற்கு அடிக்கடி ஞாபக மறதி உடனே ஒரு டாக்டரைத் தேடிப் போனார்.

"டாக்டர் .. எனக்கு ஞாபக மறதி அதிகமா இருக்கின்றது.. இதுக்கு ஏதாவது மருந்து கொடுங்களேன்.. "என்றார்.

அவரு மெதுவாக இவரைப் பார்த்து.

" நான் டாக்டர் இல்லை, வக்கீல் " அப்படி என்றார்.

# அரசாங்க நிறுவகங்கள் இனிமேல் தனியார்மயப்படுத்தப்பட மாட்டாது

## அமைச்சர் தயா கமகே உறுதி

(கொழும்பு)

அரசாங்கத்திற்குட்பட்ட அரச நிறுவகங்கள் இனிமேல் தனியார்மயப்படுத்தப்பட மாட்டாது என்று ஆரம்பத் தொழிற்றுறை சமூக மேம்பாட்டுத்துறை அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இவ்விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர்



அரிசியில் தன்னிறைவைக் காண்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முடிந்துள்ளது. அரிசி மாவைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாடு முழுவதிலும் 23 விவசாய வலயங்கள் அமைக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் 5 ஆயிரம் ஏற்றுமதிக் கிராமங்கள் அமைக்கப்படும். இதன் கீழ் 50 ஆயிரம் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதில் 20 ஆயிரம் திட்டங்கள் இந்த வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது 2023 ஆம் ஆண்டில் பலசரக்கு ஏற்றுமதியின் மூலமான வருமானத்தை 3 மடங்காக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தயா கமகே மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் தொலைத்தொடர்பு ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு வைப்பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவது தொடர்பான சிறப்பு அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை நிதி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறப்பு அரசிதழ் அறிவிப்பின் மூலம் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# பட்ஜெட்டில் பட்டதாரிகளுக்கு எந்தவொரு தீர்வும் இல்லை

(கல்முனை)

பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தீர்வு கொடுக்கின்ற எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லாதது மிகவும் மன வேதனையைத் தருகின்றது. அதே நேரத்தில் சிறுபான்மை மக்களின் கட்சிகள் பாரிய அழுத்த குழுக்களாக மாறி பட்டதாரிகள் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ஏ. எச். ஜெசீர் தெரிவித்தார்.



கல்முனையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு 100 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளனர். ஆனால் பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்தவொரு நிதி ஒதுக்கீடும் இதில் கிடையாது. பட்டதாரிகளின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏதுவான பட்ஜெட்டை கொண்டு வருவார் என்று வேலையில்லா பட்டதாரிகளின் பிரதிநிதிகளுக்கு நிதியமைச்சர் வாக்குறுதி வழங்கி இருந்தபோதிலும் எதுவுமே நடக்கவில்லை. எனவே வரவு - செலவுத் திட்டத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், முதலமைச்சர்கள் என்று ஏகப்பட்டவர்களை நாம் கடந்த இரு வருடங்களுக்கு இடையில் பல தடவைகள் சந்தித்து பேசிய போதிலும் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குமுழுமையானதீர்வை அவர்கள் பெற்றுத் தருவதாக இல்லை. தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வீசி விட்டு பின்னர் வாய்மூடி மௌனமாக இருக்கின்றனர். நாம் அவ்வப்போது போராட்டங்களை முடுக்கி விடுகின்றபோது மாத்திரம் சில கண் துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள்.

நாடளாவிய ரீதியில் வேலையற்று 58 ஆயிரம் பட்டதாரிகள் உள்ளனர். இவ்வாறே கிழக்கு மாகாணத்தில் 7 ஆயிரம் பட்டதாரிகள் உள்ளனர். பட்டதாரிகளின் பிரச்சினையை அரசாங்கம் முன்னிலைப்படுத்தி முதலில் முழுமையாக தீர்க்க வேண்டும்.

வருகின்ற பொதுத் தேர்தலுக்கு முன்னதாக அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும். இல்லையேல் அத்தேர்தலில் 58 ஆயிரம் பட்டதாரிகளும் ஒருமித்து நின்று அரசாங்கத்துக்கு சரியான பாடத்தை புகட்டுவார்கள் என்பதை முன்னெச்சரிக்கையாக சொல்லி வைக்கின்றோம். 58,000 பட்டதாரிகளுடைய குடும்பங்கள், உறவுகள், நட்பு வட்டங்கள் ஆகியவற்றின் வாக்குகள் கணிசமான தாக்கத்தை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் சிறுபான்மை மக்களின் கட்சிகள் பாரிய அழுத்த குழுக்களாக மாறி பட்டதாரிகளின் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### உள்நாட்டு துப்பாக்கி, தன்னியக்க துப்பாக்கி ரவைகளுடன் ஒருவர் கைது

(மஹியங்கனை)

மஹியங்கனைப் பகுதியில் உள்நாட்டு துப்பாக்கி மற்றும் தன்னியக்க துப்பாக்கி ரவைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹியங்கனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பகொல்ல, அழுத்கெடியாவ பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து ரி-56 ரக உள்நாட்டு துப்பாக்கியொன்றும், 24 தன்னியக்க துப்பாக்கி ரவைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மஹியங்கனைப் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# எதிர்பார்ப்புக்களுடன் இருந்த தோட்டத்தொழிலாளர்களை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது

## டிலான் பெரேரா கவலை

(கொழும்பு)

இந்த ஆட்சியாளர்களை நம்பி வாக்களித்த தோட்டத்தொழிலாளர்களுக்கு கொடுப்பனவும் இல்லாத, நாட்டு மக்களுக்கு அபிவிருத்தியும் இல்லாத ஆட்சியே கடந்த நான்கு ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இந்த வரவு-செலவுத் திட்டம் வெறுமனே தேர்தலை இலக்குவைத்த ஒன்றென எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் சனிக்கிழமை வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில்.

வரவு-செலவுத் திட்டத்தில் வரவு இல்லை வெறுமனே கடன் மட்டுமே உள்ளது. ஆகவே வரவு இல்லாத கடன் செலவுத் திட்டமே இதுவாகும். 52 நாட்களில் நாங்கள் கொடுத்த சலுகையைக் கூட இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கவில்லை. குறுகிய காலத்தில் நாங்கள் கொடுத்த சலுகைகள் கொண்டே இன்றுவரை விவசாயிகள் செயற்பட்டு வருகின்றனர்.

அதேபோல் தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினையில் அவர்களுக்கு 900 ரூபாவை கொடுக்கும் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. அதற்கான வாய்ப்புக்கள் இருந்தது, நாம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். எனினும் நல்லாட்சியில் தலைவர்கள் 1000 ரூபாவைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாகக் கூறி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கக் கூறினார்கள்.

ஆனால் இன்று தோட்டத்தொழிலாளருக்குச் சம்பளக் கொடுப்பனவுகளும் இல்லை, அபிவிருத்தியும் இல்லை. இறுதியாக வரவு-செலவுத் திட்டத்தில் மக்களை ஏமாற்றக்கூட அவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவோம் எனக் கூறவில்லை. எதிர்பார்ப்புக்களுடன் இருந்த தோட்டத்தொழிலாளர்களை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என டிலான் மேலும் தெரிவித்தார். (இ-7)

### மாணிக்கக்கல் அகழ்வு ஏழு பேர் கைதாகினர்

(பொகவந்தலாவ)

பொகவந்தலாவ பெற்றேசோ தோட்டப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஏழுபேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


நேற்றுக்காலை குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொகவந்தலாவ பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மாணிக்கக்கல் அகழ்விற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 200 | 170 | 240 |
| தக்காளி | 50 | 50 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 20 | 80 | 60 |
| கோவா | 30 | 50 | 40 | 60 |
| கரட் | 80 | 100 | 80 | 140 |
| பூசணி | 40 | 30 | 35 | 40 |
| புடோல் | 60 | 50 | 70 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 50-150 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 70 | 100 |
| பயற்றங்காய் | 140 | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 50 | 35 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 270 | 500 |
| போஞ்சி | 100 | 90 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 70 | — | 50 | 120 |
| கீரை –1பிடி | 30 | 50 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 90 | 70 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | — | — | 100 | 80 |

# தனக்கும் திகாம்பரத்திற்கும் இடையில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லையாம்



(பதுளை)

தமக்கும் அமைச்சர் பழனி திகாம்பரத்திற்கும் இடையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் நேற்று முன்தினம் காலை பதுளை வேவெஸ்ஸ தோட்டத்தில் 50 வீடுகளும், தெல்பெத்த தோட்டத்தில் 50 வீடுகளும் அடங்கலாக 100 தனி வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இந்த பட்ஜெட்டின் மூலம் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது

## சுசில் சுட்டிக்காட்டு

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி மோசடியால் ஏற்பட்ட நட்டம் தொடர்ந்தும் நாட்டின் பொருளாதாரத்திற்கு தாக்கம் செலுத்துவதால் மூலம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு வரவு -செலவுத்திட்ட நான்காம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் கையூட்டலாக அரசாங்க சேவையாளர்களுக்கு 2500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், தற்போது பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெருந்தோட்ட விவகாரம் தொடர்பான கருத்தாடல்களை முன்வைக்கின்றமை மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார். (இ-7)

# சவேந்திர சில்வாவின் நியமனத்திற்கு ஐ.நா.ஆணையாளர் கடும் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையின் இராணுவத் தலைமை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமைக்கு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பசெலெட் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டது.

அந்த அறிக்கையிலேயே, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமனத்துக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், 'மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருந்தவர்.

அவரது கட்டுப்பாட்டில் இருந்த படையினர், அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களை மீறினார்கள் என்று, ஐ.நா. பொதுச்செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையிலும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கையிலும், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன' எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் எதிர்வரும் 20 ஆம் திகதி 15 பக்கங்களைக் கொண்ட, இலங்கை தொடர்பான அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பசெலெட் சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கைத் தாதியர் 3,000 பேருக்கு அமெரிக்காவில் வேலைவாய்ப்பு!

அமெரிக்காவிலுள்ள வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கு இலங்கையில் இருந்து முதற் தடவையாக தாதி ஒருவர் பயணமாகியுள்ளார்.



இலங்கை தாதியர் சங்கத்தில் பதிவு செய்துள்ள கண்டி பொது வைத்தியசாலையில் புரிந்த றுவனி ரணசிங்ஹ என்பவரே தாதியர் சேவைக்காக அமெரிக்கா சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தவிர மேலும் 25 தாதியர்கள் அமெரிக்கா செல்வதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன், American company, Michigan-based Karma Services நிறுவனத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அண்மையில் கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு அமைவாக 3, 000 பேருக்கு இந்த வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்தியாவுடன் இணைந்து

# மத்தள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யத்தீர்மானம்

## அமைச்சரவை பச்சைக்கொடி

(கொழும்பு)

இந்தியாவின் விமான நிலைய அதிகார சபையுடன் இணைந்து, மத்தள அனைத்துலக விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு, அமைச்சரவை பச்சைக்கொடி காண்பித்துள்ளது.

மத்தள விமான நிலையத்தை இந்தியாவின் விமான நிலைய அதிகார சபையுடன் இணைந்து செயற்படுத்துவதற்கான இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கான முறைப்படியான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கே, அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

மத்தள விமான நிலையத்தை இயக்குவதற்காக இந்திய விமான நிலைய அதிகார சபை முன்வைத்த யோசனையை நடைமுறைப்படுத்தல் என்ற தலைப்பிலான, அமைச்சரவைப் பத்திரம் கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மங்கள சமரவீர, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தனர்.

இதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுக்களை நடத்துவதற்கான குழு, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுடன் முறைப்படியான பேச்சுக்களை நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுக்களின் மூலம், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உடன்பாடு இறுதி செய்யப்படவுள்ளது. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1667

### கமலி

முடியாது என்று சொல்ல வேண்டிய இடங்களில் முடியாது என்று உடனே சொல்லிவிடுங்கள்... இது பல பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துவிடும்



### ராஜன்

கனவு காண்பவர்கள் அனைவரும் தோற்பதில்லை... கனவு மட்டுமே காண்பவர்கள் தான் தோற்கிறார்கள்



### குமார்

அடிக்கடி புலம்பாதீர்கள் அது சிலருக்கு வேடிக்கையாகத் தோன்றும், சிலருக்கு வெறுப்பாகத் தோன்றும்



### மலர்

உலகத்தில நல்லவன் எப்பவும் கடைசிலதான் ஜெயிக்கிறான்... அதுக்குள்ள கெட்டவன் நல்லா வாழ்ந்திட்டுப் போயிடுறான்



### ஜெனனியா

இதுவும் கடந்து போகும் என்ற தத்துவத்தை எளிமையாகச் சொல்லிவிடலாம்... ஆனால் வாழ்க்கையில் சில நிமிடங்களை கடப்பது அவ்வளவு சுலபமல்ல



### வேணி

அன்று பல ரசனையுடன் வர்ணித்தவர்கள் இன்று உன்னை கீழ்த்தரமாக விமர்சிப்பார்கள்.... கவலை கொள்ளாதே மனமே... மனித குணம் இப்படித்தான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

191



தோமஸ் ஸ்கின்னர் (Thomas Skinner)

**“1848 இல் வெளியிடப்பட்ட ஒரு விரிவான அறிக் கையில், தோமஸ் ஸ்கின்னர் (Thomas Skinner- இவரே இலங்கையின் முதலாவது உத்தியோகபூர்வமான சிவில் பொறியியலாளரும் வீதிகளுக்கான அத்தியட்சகருமாவார்). இருக்கின்ற வீதிகளின் பல்வேறு பகுதிகள் கிரவலிடப்படாமலும் கற்கள் பதிக்கப்படாமலும் இருப்பதனால் அவை அதிகரித்துச் செல்லும் போக்குவரத்தின் அழுத்தத்தைத் தாங்க இயலாத நிலையில் உள்ளன எனக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்”**

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

1848 இல் வெளியிடப்பட்ட ஒரு விரிவான அறிக்கையில், தோமஸ் ஸ்கின்னர் (Thomas Skinner- இவரே இலங்கையின் முதலாவது உத்தியோகபூர்வமான சிவில் பொறியியலாளரும் வீதிகளுக்கான அத்தியட்சகருமாவார்)

இலங்கையின் பிரதான வீதிகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

இருக்கின்ற வீதிகளின் பல்வேறு பகுதிகள் கிரவலிடப்படாமலும் கற்கள் பதிக்கப்படாமலும் இருப்பதனால் அவை அதிகரித்துச் செல்லும் போக்குவரத்தின் அழுத்தத்தைத் தாங்க இயலாத நிலையில் உள்ளன எனக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

ஆயினும் அரசாங்கம் போக்குவரத்துப் பிரச்சினையில் கணிசமான அளவு அக்கறை காட்டியிருந்தது.

வீதிகளைச் சீராக்குவதிலும் விசேடமாக மதகுகள் அமைப்பதிலும் மண் வீதிகளுக்கு கிரவல் அல்லது கற்கள் பதிப்பதிலும் பெருமளவு பணம் செலவழிக்கப்பட்டிருந்தது.

முன்னதாகப் புகையிரதப் பாதைக் காலம் 1863 அளவில் ஏற்படுவதற்கு அண்மித்த காலத்தில் ஏறத்தாழ இலங்கையின் அரைப்பங்கினதான 2096 மைல்களைக் கொண்ட வீதிகள் கிரவலிடப்பட்டோ அல்லது கற்கள் பதிக்கப்பட்டதாகவோ இருந்தன.

இக்காலகட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நிறுவன ரீதியான மாற்றங்களின் காரணமாக ஓரளவுக்கு தொழில்நுட்ப ரீதியான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

றோயல் பொறியியலாளர் என்று படைப்பிரிவினாலும் இராணுவ அதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட வீதி அமைக்கும் பாரம்பரியம் ஒரு சிவில் பொறியியலாளரின் தலைமையின் கீழான ஒரு சிறிய சிவில் திணைக்களத்தினாலும் வீதிகளின் அத்தியட்சகராலும் மேற்கொள்ளப்பட்டன.

பொதுவேலைத் திணைக்களத்தின் முன்னோடியாக இருந்த சிவில் பொறியியலாளரின் திணைக்களம், வீதிகள் அமைப்பதில் தொழில்நுட்பத் திறன்மிக்கது என்ற பெருமைக்கு ஏற்புடையதாகி வீதிகள் அமைக்கும் பணி கணிசமான அளவு முன்னேற்றம் கண்டது.

1865-1900 காலப்பகுதியிலான இதன் முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்ளும் போது வீதிகள், புகையிரதப் பாதைகளுடன் இணைப்பை ஏற்படுத்துவதுடன் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களுக்குப் பொருள் விநியோகம் செய்வதற்கான ஒரு வழியாகவும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது தெளிவாகின்றது.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் வீதி முறைமை அதிதுரிதமாக அபிவிருத்தியை அடைந்தது.

யாழ்ப்பாணக் கலெக்டராக இருந்த டைக் (Dyke) 1833 இல் அரசாங்க அதிபராக நியமனம் பெற்று 1867 இல் அவர் இறக்கும் வரையில் அப்பதவியில் இருந்தார்.

அவர் நியமிக்கப்பட்டபோது ஒல்லாந்தரால் பயன்படுத்தப்பட்ட மணற்பாதைகளையும் ஒழுங்கைகளையும் தவிர வீதிகள் காணப்படவில்லை.

வன்னி நிலப்பரப்பு இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் தொடர்பற்றதாக இருந்தது. இந்த மாகாணத்தைச் சீர்திருத்தவும் அபிவிருத்தி செய்யவும் டைக் திட்டமிட்டார். 1844 இல் போக்குவரத்துக் கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து அவர் தனது திட்டங்களைச் செயலாக்க ஆரம்பித்தார்.

படிப்படியாக தீபகற்பத்தில் வீதிகள் இணைக்கப்பட்டன. 1869 இல் ருவைனம் (Twynam) அரசாங்க அதிபராக நியமனம் பெற்றார். இவரே தீபகற்பத்தைத் தீவுகளுடனும் பெருநிலப் பரப்புக்களுடனும் இணைக்கும் வகையில் பொருத்தமான தாம்போதிகள் அமைக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இது ஒரு அத்தியாவசியத் தேவை என்பதை சேர்.வில்லியம் கிறகோரி (Sir William Gregory) அங்கீகரிக்கும் வரையில் இவை ஒழுங்காக உருவாக்கம் பெறவில்லை.

மத்திய வீதி திறக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்திற்கும் மத்திய மாகாணத்திற்கும் இடையிலான வியாபாரம் சாத்தியமாகியதுடன் மன்னார்-அநுராதபுரம் ஊடான பழைய பாதை கைவிடப்பட்டது.

தீபகற்பத்திலும் ஏனைய இடங்களிலும் பாலங்களும் அமைக்கப்பட்டன. யாழ்ப்பாணத் தீபகற்பத்தை ஏனைய பகுதியுடன் இணைப்பதற்கு அவசியமான புகையிரதப் பாதையின் தேவை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இதை அமைப்பதற்கு 1872 இல் 6000 ரூபா ஒதுக்கப்பட்டது.

வீதிகள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் என்பன அமைக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணத் தீபகற்பம் முழுவதிலும் போக்குவரத்து மேலும் மேலும் இலகுவாயிற்று. இக்காலகட்டத்தில் மாட்டுவண்டிகளும் குதிரை வண்டிகளுமே பிரதான போக்குவரத்துச் சாதனங்களாக இருந்தன,

மோணிங்ஸ்ராரில் வெளியான பின்வரும் செய்திக்கிணங்க தீபகற்பத்து மக்கள் தபால் வண்டிகளைப் பெருமளவு பயன்படுத்தினர் என்பது தெரிகின்றது.

(தொடரும்)

# வரவு-செலவுத்திட்டம் - 2019

## "என்ர்ப்பிறைஸ் ஸ்ரீலங்கா – மக்களை வலுவூட்டலும் வறியோரைப் பராமரித்தலும்"

04

இப்பயிற்சி நெறியானது தேசிய தொழிற்பயிற்சி தரத்தின் பின்னர் அங்கீகரிக்கப்படுவதோடு இப்பயிற்சி நெறியானது தெரிவு செய்யப்பட்ட இராணுவ முகாம்களில் இடம் பெறும். இப்பயிற்சியாளர்களுக்கு தற்போது தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் உதவித் தொகை மற்றும் சலுகை பருவகால போக்குவரத்து சீட்டு என்பன வழங்கப்படும்.

❖இலங்கை இராணுவத்தினர் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள தமது முகாம்களில் எமது இளைஞர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட சில விளையாட்டுக்களுக்கான பயிற்சியளிப்பர்.

### ஆரோக்கியமான சமூகம்

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, நாங்கள் சுகாதாரத்துறையில் உட்கட்டமைப்பு வசதிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக ரூபா. 24,750 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளோம். இவ்வொதுக்கமானது புதிய உபகரணங்கள், கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் வைத்தியசாலைகளில் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றில் முதலிடப்படுகின்றது. இது கடந்த வருட ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில் 38 சதவீத அதிகரிப்பாகும்.

❖ ஊவா, சப்ரகமுவ, மத்திய, வடமத்திய மாகாணங்களில் ஆரம்ப சுகாதார நல அலகுகளை ஸ்திரப்படுத்தும் நோக்குடன் ரூபா. 1,625 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலதிக நேரம் நோயாளிகளைக் கவனிப்பதினை ஒருங்கிணைப்புச் செய்யும் முறைமையினை அறிமுகம் செய்தல் மற்றும் பரிந்துரை வலையமைப்பினூடாக ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளை கவனிப்பதற்கான வசதிகளை இயலுமாக்குவதானது, சேவை வழங்குநர்களிடையே இடம்பெறும் வேலை இரட்டிப்பினை தவிர்ப்பதற்கு உதவியாக அமையும்.

❖ எமது "சுவசெறிய" அம்புலன்ஸ் சேவையானது பெரும் வெற்றியாகும். அது அனைத்துக் குடிமகன்களுக்கும் அத்தியாவசியமான ஒரு சேவையாகும். நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் இச்சேவையினை விரிவுபடுத்துவதற்கான ஆதரவுகள் பெற்றுக்கொடுக்கப்படும். எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதியில் 300 தள நிலையங்கள் ரூபா. 600 மில்லியன் செலவீனத்தில் உருவாக்கப்படும். இவ்வருடத்தில் 100 தள நிலையங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 200 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, தீராத சிறுநீரக நோயுடன் தொடர்புட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான வளங்களை தொடர்ந்தும் நாங்கள் பெற்றுக் கொடுப்போம். இதனடிப்படையில் நாங்கள் வீடுகளுக்கு இரத்தப் பிரிப்பு இயந்திரங்களை பெற்றுக் கொடுப்பதோடு 45 வைத்தியசாலைகளில் இரத்த ஒழுக்கு-இரத்தப்பிரிப்பு நிலையங்கள் (Hemo- Dialysis Center) மீள் பிரசாரண நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளுடன் பெற்றுக் கொடுக்கப்படும்.


❖நாட்டின் தீராத சிறுநீரக நோய்ப் பாதிப்பிற்குட்பட்ட மாவட்டங்களில் வீடு வீடாகச் சென்று நோயினை முன்னரே கண்டறிந்து கொள்வதற்காக வேண்டிய பரிசோதனை முறையானது மேலும் வலுவூட்டப்படும்.

❖ விசர் நாய்க்கடி நோயினை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்காக விசர் நாய்க்கடி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் மேலும் வலுவூட்டப்படும். முழுமையான தெருநாய்க் கருத்தடை நிகழ்ச்சித்திட்டமானது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் அறிமுகப் படுத்தப்படும். இதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்படும்.

❖ விசேடமாக முதியோர் சனத்தொகையின் அதிகரிப்போடு தொற்றா நோய்களின் எண்ணிக்கையானது உயர்ந்து செல்வதானது முறையான நோய்த் தணிப்பு பராமரிப்பு சேவைகள் அறிமுகம் செய்வதனை வேண்டியுள்ளது. இதற்காக வைத்தியர்கள் தாதிகள் மற்றும் ஏனைய மருத்துவ தொழில் வல்லுநர்களின் வழி நோய்த் தணிப்பு பராமரிப்பு ஆற்றலினை கட்டியெழுப்புவதற்கு வசதிகள் வழங்கப்படும்.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, விளையாட்டானது ஆரோக்கியமானதொரு சமூகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். அதேபோல் அது தலைமைத்துவம் மற்றும் குழுவாக இயங்கும் பண்பினை கட்டியெழுப்புகின்றது. விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக நாங்கள் ஏற்கனவே ரூபா. 3,800 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

## இராணுவத்தினர் மூலம் இளைஞர்களுக்குப் பயிற்சி



❖ இதற்கு மேலதிகமாக மாத்தளையில், பர்னாட் அலுவிகாரை விளையாட்டுத் தொகுதி மற்றும் கொலன்னாவையில் வீரசிங்க மல்லிமாரச்சி விளையாட்டு மைதானம் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு எமது கிராமிய இளைஞர்களின் விளையாட்டினை ஊக்குவிப்பதற்கு ஆதரவளிப்போம். இதன்பொருட்டு ஒவ்வொரு மைதானத்திற்கும் ரூபா 300 மில்லியன் 2 வருட காலப் பகுதியில் பெற்றுக் கொடுக்கப்படும்.

❖ தேசிய ஒலிம்பிக் நிதியமானது மெய்வல்லுநர், கரப்பந்து, மேசைப் பந்து போன்ற விளையாட்டுக்களுக்கு ஆதரவளிக்கக் கூடிய வகையில் மேம்படுத்தப்படும்.

### ஆராய்ச்சி அபிவிருத்தி கலாசாரம்

❖நாட்டில் அரச மற்றும் அரச துறையல்லாத பல ஆராய்ச்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், இவைகளில் இடம்பெறும் பெரும்பாலான ஆராய்ச்சி முடிவுகளானது பயன்படுத்தக் கூடிய வகையில் அல்லது வர்த்தக ரீதியாக சந்தைப்படுத்தக்கூடிய வகையில் மாற்றியமைக்கப்படவில்லை. இந்நிலையானது இதுகால வரையில் இத்துறை மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் வினைத்திறனை கேள்விக்குறியாக்கியுள்ளது. அதனடிப்படையில் எமது அணுகுமுறையானது ஆராய்ச்சி மற்றும் முதலீடுகளானது பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மற்றும் எதிர்கால விஞ்ஞானத்திற்கான முதலீடாகவும் கொள்ளப்படும்.

❖ "தொழில் விஞ்ஞானம்" என்ற சவால் நிகழ்ச்சித் திட்டத்தினை அறிமுகம் செய்யவுள்ளோம். விஞ்ஞான சமூகத்திற்கு பின்வரும் 5 கருப்பொருள்களில் வேலை செய்வதற்கான சவால் வழங்கப்படும். பொருத்தமான தீர்வுகளை அமுல்படுத்தப்படுவதற்குத் தேவையான நிதியானது பெற்றுக் கொடுக்கப்படும்.

(அ) விவசாயம் மற்றும் மீன்பிடித்துறையில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைத்தல்.

(ஆ) நெற்செய்கை மற்றும் சிறுபயிர்கள் அறுவடையில் உலகளாவிய அளவுகோலை அடைதல்.

(இ) யானை-மனித முரண்பாட்டைத் தீர்த்தல்.

(ஈ) 1,500 சதுரஅடி பரப்புடைய குறைந்த செலவிலான வீட்டு அலகுகளை உருவாக்குதல்.

(உ) உள்நாட்டு மருந்து மூலிகைகள் மற்றும் உயிரியல் உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதிச் சேர்க்கை செய்வதினூடாக அவற்றை ஊட்டச்சத்து மருந்துகளாக மாற்றுதல்.

### சிறந்த நகரங்களை உருவாக்குதல்

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நகரங்களானது பிரஜைகள் நட்பு, நிலைபேறான நிலை மற்றும் சமூக சமத்துவத்துக்கான வாய்ப்புக்களைக்கொண்டதாகவும் மெதுவாக மாறி வருகின்றது. இதனடிப்படையில் கொழும்பு நகரமானது "ஆசியாவின் பூங்காவனம்"என்று அழைக்கப்படுகின்றது.

❖நகர மீள் பிறப்பாக்கல் கருத்திட்டத்தின் கீழ் 8,000 இற்கு அதிகமான வீடுகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 7,500 இற்கு அதிகமான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, மேலும் 5,000 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக ரூபா 8,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖நாட்டில் அனைத்து வசதிகளையும் கொண்ட நிலையான நகரமயமாக்கலினை மேம்படுத்துவதற்காக 9 மாகாணங்களை உள்ளடக்கிய சுகித்தபுரவர நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படும். இதற்காக ரூபா 3,000 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேலும் ரூபா 2,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

❖ "பேரை வாவி சுத்திகரிப்பு" கருத்திட்டமானது சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் உதவியுடன் 2000 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், இத்திட்டம் நீர் தரத்தினை மேம்படுத்தும் வகையில் நிறைவு செய்யப்படும்.

❖கொழும்பு நகரத்தில் மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவமானது அறுவக்காலுவில் அரசாங்க முதலீட்டுடன் தீர்க்கப்பட்டுள்ளதுடன், 2019 இல் இதற்காக ரூபா 7,600 மில்லியன் முதலீடு செய்யப்படும். தற்பொழுது தனியார்துறை முதலீடுகளும் இடம் பெறுகின்றன.

❖ வெள்ளம் மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவம், கொழும்பு நீரேந்து பகுதியில் வடிகாலமைப்பு வசதி மேம்பாடு, பேரை வாவி மற்றும் பெத்தகன பூங்கா மற்றும் வேரஸ் கங்கை கருத்திட்டம் என்பன கொழும்பு நகரம் மற்றும் கொழும்பு பெரும்பகுதி பிரதேசத்தில் வெள்ளத்தினைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ஏற்கனவே ரூபா 10, 900 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது முதலீடுகளை கொழும்பு நகரத்திலிருந்து காலி, கண்டி மற்றும் யாழ்ப்பாண நகரங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளோம். வீதிப் போக்குவரத்து முகாமைத்துவ நடவடிக்கைகள், பிரதான வடிகாலமைப்புகளின் புனரமைப்பு மற்றும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள், நகர தரமேம்பாடு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதான கட்டடங்களை புதுப்பித்தல் மற்றும் மீள் பயன்படுத்தல், தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் கடலரிப்புத் தணிப்பு நடவடிக்கைகள் என்பவற்றினை இத்திட்டம் உள்ளடக்கியிருக்கும். இதற்காக ரூபா 9,225 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ யாழ்ப்பாணத்தில் தனிச்சிறப்பு மிக்க பழைய நகர மண்டபம் யுத்தத்தின் போது அழிவடைந்தது. யாழ்ப்பாண நகர மண்டபத்தினை மீள்கட்டமைப்பதற்கான சந்தர்ப்பம் தற்பொழுது ஏற்பட்டுள்ளது. இதற்காக ரூபா 700 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

❖எமது மலைநாட்டு மரபுரிமைகளை பேணுதல் மற்றும் பாதுகாக்கும் அதேவேளை, மலைநாட்டுக்கேயுரிய கைவினை, கட்டடக்கலை, கலாசார விழுமியங்கள், பாரம்பரியங்கள், சுதேச மருத்துவம் மற்றும் வரலாற்று பெறுமதிமிக்க இடங்களைப் பாதுகாப்பதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

❖மரபுரிமை பெறுமானங்கொண்ட போகம்பரை சிறைச்சாலை மீள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், இரண்டு வருடங்களில் பொது மக்களுக்கான இடமாக மாற்றப்படும். இதற்காக இவ்வருடம் ரூபா 750 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

❖கல்முனை, சம்மாந்துறை, வாழைச்சேனை மற்றும் தலைமன்னார் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டிலுள்ள அரசாங்க மற்றும் தனியார் வர்த்தகக் கட்டடங்கள் அனைத்தும் 2023 ஆம் ஆண்டளவில் "வலது குறைந்தோர் நட்பு" கட்டடங்களாக மாற்றப்படும்.

(19 ஆம் பக்கம் பார்க்கவும்)

# ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்க்க ரூ.12 ஆயிரம் மில். மேலதிகமாக ஒதுக்கீடு

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது 2020 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து புதிய கட்டட அங்கீகாரங்களுக்கான கட்டாயத் தேவைப்பாடாக மாற்றப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டளவில் அனைத்து அரச கட்டடங்களும் "வலது குறைந்தோர் நட்பு" கட்டடங்களாக காணப்படும்.

❖ குழாய் நீர் வழங்கலை 2020 ஆம் ஆண்டளவில் ஆகக் குறைந்தது 60 சதவீதமாக அதிகரிக்கும்நோக்கத்துடன் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய ரூபா 45,000 மில்லியன் பெறுமதி யான நீர்வழங்கல் கருத் திட்டங்கள் முன்னெடுக் கப்படும். அடுத்த 2 வருடங்களில்ஏறக்குறைய200,000. குடும்பங்கள் நன்மையடையும் வகையில் 1,000 கிராமங்களை உள்ளடக்கியதாக "பிரஜாஜல அபிமான்" நிகழ்ச்சித் திட்டம் சமுதாய அடிப்படை நீர் வழங்கல் திட்டத்தினூடாக மேலும் எமது ஒத்துழைப்பினை விரிவுபடுத்துவோம்.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது முழு நாளையும் பாரியளவு வாகன நெரிசலில் கழிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. எமது போக்குவரத்துத் துறையானது நாட்டின் நடுத்தர வருமானம் பெறுநர்களின் தேவையினை இதுவரை நிறைவேற்றவில்லை. எமது பொதுப் போக்குவரத்து முறைமை மீது அவசரக் கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதற்காக மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

❖ நாடு முழுவதிலும் பேருந்துப் போக்குவரத்து சேவையினை வழங்குவதற்காக அடுத்த ஐந்து வருடங்களில் "சஹசர" பேருந்து நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். பயணிகளுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்காக சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதுடன், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புகளுடன் சிறந்த தொழில் பாதுகாப்பு, தனியார் துறை பேருந்து ஊழியர்களுக்கு வழங்கப்படும். பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தல், வீதி விபத்துகள் மற்றும் பாதைகளில் காணப்படும் ஒழுங்கீனங்கள் போன்ற தற்பொழுது காணப்படும் திருப்திகரமற்ற போட்டி நிலைமைக்குப் பதிலாக மாதாந்த அடிப்படையில் பயணிக்கும் கிலோ மீற்றரின் அடிப்படையில் பேருந்து உரிமையாளர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான தற்காலிக ஏற்பாடொன்றாக வருமான ஒத்துழைப்பு நிதியமொன்று தாபிக்கப்படும். முன்செலுத்தல் கட்டண அட்டைகள், இலத்திரனியல் முறைமையில் பேருந்து பயணிக்கும் இடத்தினை கண்டறிதல், ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தல் மற்றும் கையடக்கத் தொலைபேசி பிரயோகிகள் **(Mobile Application)** மூலம் பயணிகளின் கைவிரல் அடையாளத்தினை பிரயோகித்து பேருந்து நேர அட்டவணை மற்றும் அடுத்த பேருந்து பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற சேவைகளை மத்திய மற்றும் மேல் மாகாணங்களில் ஆரம்பமாக இன்னும் சில மாதங்களில் நாம் அறிமுகப்படுத்துகின்றோம்.

❖ நவீன பல்மாதிரி பயணிகள் தரிப்பிடங்கள் மாக்கும்பரையில் ஆரம்பிக்கப்பட்டு கண்டி, கடவத்தை, கோட்டை மற்றும் மொரட்டுவையிலும் அறிமுகப்படுத்தப்படும். இலங்கை போக்குவரத்து சபையின் சந்தையில் 40 சதவீதப் பங்கினை உறுதிப்படுத்துவதுடன் இ.போ.சபை மற்றும் தனியார் பேருந்து இயக்குநர்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படும். இதற்காக நாடு முழுவதிலும் டிஜிற்றல் தர வுப் பிரவாகத்தின் மூலம் இணைந்த பேருந்து இயக்கக் கட்டுப்பாட்டு நிலையமொன்று தாபிக்கப்படும். இதன் மூலம் 21ஆம் நூற்றாண்டில் பேருந்துப் போக்குவரத்தானது மிகவும் கவர்ச்சிகரமான தேர்வாக மாற்றமடையும். இம்முதலீடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ரூபா. 1,300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖அடுத்த இரண்டு வருடங்களில் பாதுகாப்பு மற்றும் பயன்படுத்தல் நட்பு நியமங்களுடன் கூடிய 250 பேருந்துகளை மேலதிகமாக சேர்த்துக் கொள்வதன் மூலம் இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்துத் தொகுதி விரிவாக்கப்படும். விசேட தேவையுடையோருக்கு மிகவும் பொருத்தமான பேருந்துகளை இலங்கைப் போக்குவரத்து சபை அறிமுகப்படுத்தும்.



❖"என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "சிட்டி ரைட்" சலுகைக்கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுவதுடன், 1,000 சொகுசு பேருந்துகளின் மூலம் தனியார் பேருந்து தொகுதியினை விரிவாக்குவதற்காக வட்டிச் செலவீனத்தில் 75 சதவீதத்தினை அரசாங்கம் பொறுப்பேற்கும். (மேலதிக விபரங்களுக்கு விளக்கக் குறிப்பு III (ஆ)-1.4)

❖ அதேவேளை, சுற்றாடல் நட்பு, பாதுகாப்பு மற்றும் அதிக சௌகரியத்துடன் இலத்திரனியல் முச்சக்கரவண்டிகள் மற்றும் சிறிய கார்களை தரமுயர்த்துவதற்கு "என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" கடன் திட்டத்தின் "மினி டெக்ஸி" சலுகைக் கடன்கள் மூலமாக முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். இதற்காக 75 சதவீதமான வட்டிச் செலவீனத்தினை அரசாங்கம் பொறுப்பேற்பதுடன், பழைய முச்சக்கர வண்டியினை பாவனையிலிருந்து அகற்றுதல்வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு விளக்கக் குறிப்பு III (ஆ)-1.5)

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது ஒட்டுமொத்த புகையிரத சேவையும் முழுவதுமாக குறைபயன்பாடுடையதாக காணப்படுகின்றது. சிறந்த புகையிரத சேவைக்கான தேவை குறிப்பிடத்தக்களவு காணப்படுகின்றது. இதனைத் தனியார் துறையுடன் இணைந்து முன்னெடுப்பது சிறந்ததென நாம் நம்புகின்றோம். இதற்காக, இலங்கைப் புகையிரத சேவைக்கு புகையிரதப் பெட்டிகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கும் அதன் மூலம் புகையிரத சேவை வசதிகளை 4 நிரல்களாக மேம்படுத்துவதற்கும் தனியார் துறைக்கான அனுமதியினை நாம் வழங்குவோம்.

❖மாலபையினையும் கொழும்புக் கோட்டையினையும் இணைக்கின்ற கொழும்பு நகர இலகு ரயில் போக்குவரத்து வேலைகள் ஆரம்பிக்கப்படுவதுடன், இதற்காக ரூபா. 5,000 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, தெற்கு அதிவேகப் பாதை விரிவாக்கம் மற்றும் வெளிச்சுற்றுப் பாதை என்பன 2019 இல் நிறைவு செய்யப்படும். மத்திய அதிவேகப் பாதை கட்டம் I மற்றும் III ஆரம்பிக்கப்படுவதுடன், கட்டம் II இற்கான பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். பாதைவலையமைப்பினை மேலும் மேம்படுத்துவதற்கு இரத்தினபுரி மாவட்டத்தினை தெற்கு அதிவேகப்பாதையுடன் இணைக்கின்ற ருவன்புர அதிவேகப்பாதைக்கான பணிகள் 2019 இல் ஆரம்பிக்கப்படும்.

❖ "ரண் மாவத்" நிகழ்ச்சித்திட்டம் - கௌரவ சபாநாயகர் அவர்களே, பாதைகள் மற்றும் அதிவேகப் பாதைகளை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் குறிப்பிடத்தக்களவு தொகையினை முதலீடு செய்துள்ளது.

2015 இலிருந்து பாதைகளுக்காக மாத்திரம் ஏறக்குறைய ரூபா 700,000 மில்லியனை செலவிட்டுள்ளோம் பெருந்தொகை யான செலவீனத்தினை மேற்கொண்ட போதிலும் பெருமளவிலான பாதைகள் நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. "கம்பரெலிய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய பாதை நிர்மாணத்துறைக்காக நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இருந்த போதிலும் கிராமிய மற்றும் ஏனைய பாதை அபிவிருத்தியின் தேசிய முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு "ரண் மாவத்" அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பிரதானமாக கிராமிய பாதைகளின் பராமரிப்பு மற்றும் நிர்மாணத்திற்காக ரூபா 10,000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### அரசதுறை சேவை வழங்கல்

❖ எமது அரசாங்கம் 2016 இல் 10,000 ரூபாவினை மாதாந்த இடைக்காலக்கொடுப்பனவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன், 2016 இலிருந்து 2020 வரை 1:4.07 என்ற விகிதத்தினை பேணும் வகையில் 5 கட்டங்களாக அரச துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்திற்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டது. இதன் விளைவாக அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதே காலப் பகுதியில் 107 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்நோக்கத்திற்காக 2019 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் ரூபா 40 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசதுறை அடிப்படைச்சம்பளம் அதிகரிப்பு 2015-2020**

**மாதமொன்றுக்கு ரூபா**

| வகை | 2015 | 2016 | | 2017 | | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சம்பளம் | சம்பளம் | அதிகரிப்பு | சம்பளம் | அதிகரிப்பு | சம்பளம் | அதிகரிப்பு | சம்பளம் | அதிகரிப்பு | சம்பளம் | அதிகரிப்பு |
| அலுவலக உதவியாளர் | 11,730 | 14,234 | 2,504 | 16,738 | 5,008 | 19,242 | 7,512 | 21.746 | 10.016 | 24,250 | 12,520 |
| தாதி | 15,620 | 19,001 | 3,381 | 22,382 | 6,762 | 25,763 | 10,143 | 29,144 | 13,524 | 32,525 | 16,905 |
| பட்டதாரி ஆசிரியர் | 16,100 | 19,540 | 3,440 | 22,980 | 6,880 | 26,420 | 10,320 | 29,860 | 13,760 | 33,300 | 17,200 |
| செயலாளர் | 47,515 | 57,742 | 10,227 | 67,969 | 20,454 | 78,196 | 30,681 | 88,423 | 40,908 | 98,650 | 51,135 |

இதன் பிரதிபலனாக, கீழ் படிநிலையிலுள்ள அரசாங்க ஊழியர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 2015 இல் காணப்பட்ட 11,730 ரூபாவிலிருந்து 2020 இல் 21,400 ரூபாவாக அதிகரிக்கும்.

அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட சம்பள ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையானது அதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் பரிந்துரைகள் வெளியானதும் அமுல்படுத்தப்படும். எனவே, அனைத்து அரசாங்க ஊழியர்களுக்குமான இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவாக 2019 ஜூலை முதலாம் திகதியிலிருந்து 2,500 ரூபாவினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

❖2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இளைப்பாறிய ஏறக்குறைய 560,000 ஓய்வூதியம் பெறுநர்கள் காணப்படுவதுடன், அவர்களது ஓய்வூதியம் 06/2006 ஆம் இலக்கபொது நிர்வாக சுற்று நிருபத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, 2016 ஜனவரி 01 முதல் 2018 டிசெம்பர் 31 வரையான காலப் பகுதியின் போது ஏறக்குறைய 71,000 ஓய்வூதியம் பெறுநர்கள் இளைப்பாறியுள்ளதுடன், அவர்களது ஓய்வூதியம் 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இளைப்பாறிய நேரத்தில் பெற்றுக் கொண்ட அடிப்படைச் சம்பளத்திற்கமைவாக கணிப்பீடு செய்யப்படுகின்றது.

எனவே, 2016 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் இளைப்பாறியவர்களும் 03. 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் கீழ் பல்வேறு மட்டங்களில் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்கு தகைமைபெற்ற அத்திகதிக்குப் பின்னர் இளைப்பாறியவர்களுக்குமிடையில்பெறும் ஓய்வூதியத்தில் முரண்பாடு காணப்படுகிறது.


2019 ஜூலை முதலாம் திகதியிலிருந்து பயன் வலுப்பெறும் வகையில் இளைப்பாறும் காலத்தில் ஓய்வூதியம் பெறுநரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை சம்பளத்திற்கு 03/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கையின் முதல் 2 கட்டங்களைச் சேர்ப்பதன் மூலம் ஓய்வூதிய திருத்தமொன்றினை முன்னெடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஓய்வூதிய முரண்பாடுகளை திருத்துவதற்கு இவ்வருடத்திற்காக ரூபா 12,000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## தேடி வந்த உதவி



ஓர் அழகிய வனம். அங்கு கரடி ஒன்று தன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. அதன் இரண்டு குட்டிகளும் "அம்மா எம க்குப் பசிக்குதம்மா, சாப்பிட ஏதேனும் குடு" என்று அழு தன. பெண் கரடியானது உணவைத் தேடிச் சென் றது. இரண்டு அப்பிள்கள் மட்டுமே கிடைத்தன.

"கண்ணுங்களா, இது தான் கிடைச்சுது. அப்பா வந்தவுடன் ஏதேனும் கொண்டு வரச் சொல்ல லாம்" என்றது.

ஆண் கரடி வீட்டிற்குள் வந்தவுடன் "எனக்கு மிக வும் பசியாய் இருக்கு. சாப் பிட ஏதேனும் குடு' என்றது.

"ஐயோ! நான் கவனிக் காமல் விட்டுவிட்டேன். சாப்பிட ஒன்றுகூட இல்லை" என்றது பெண்கரடி.

"சரி நான் வெளியே சென்று சாப்பிட ஏதேனும் கொண்டு வருகிறேன்'' என்று ஆண் கரடி வெளியே சென்றது.

காட்டில் வெகுதூரம் சென்று ஓர் ஆற்றை அடை ந்தது. ஆற்றினைத் தாண் டினால் அங்கே ஒரு வாழைத் தோட்டம் இருப்பது தெரிந் தது.

ஆற்றைக் கடக்க கீழே விழுந்து கிடந்த மரத்தை இழுத்து குறுக்கே போட்டது.

"இது நமக்கு மட்டும் உதவாது! மற்ற விலங்க ளுக்கும் உதவும்" என்று எண்ணியபடி மரத்தில் நடந்து சென்று ஆற்றைக் கடந்தது.

வாழைத் தோட்டத்தை அடைந்த கரடி நல்ல வாழைப்பழமாகத் தேடி, ஒரு வாழைத்தாரைத் தூக் கிக் கொண்டு வந்தது.

வரும் வழியில் எங்கே னும் தேன் கிடைக்குமா? என்று பார்த்தது. ஒரு மர த்தில் தேன்கூடு ஒன்றைக் கண்டது.

ஆகா! இங்கு தேன் இரு க்கிறதே என்று கூட்டின் மீது கல்விட்டு எறிந்து, தேனை எடுத்தது. பின்னர் அதை ஒரு குடு வையில் நிரப்பியது.

வாழைப்பழத்தாரையும் தேனையும் தூக்கிக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தது. ஆற்றைக் கடந்து வரும்போது, "காப் பாத்துங்க, காப்பாத்துங்க' என்று சத்தம் கேட்டது.

கரடி வாழைப்பழத்தாரை யும், தேனையும் கீழே வைத்துவிட்டுப் பார்த்தது.

ஆற்றில் முயல்கள் சில தத்தளிப்பதைக் கண்ட கரடி அவற்றைக் காப்பாற்றியது.

பின்னர், அவற்றைப்பார் த்து, "எப்படி இந்த ஆற்று வெள்ளத்தில் சிக்கிக் கொண்டீர்கள்?'' என்று கேட்டது.

"நாங்கள் ஆற்றைக் கடக் கும் போது, சிறிதளவே தண் ணீர் இருந்தது. திடீர் என வெள்ளம் வந்து எங்களை அடித்துக் கொண்டு வந்து விட்டது" என்றன முயல்கள்.

"சரி இந்த வாழைப்பழங் களைச் சாப்பிடுங்கள். இந் தத் தேனையும் குடியுங் கள்'' என்று கொடுத்தது கரடி.

முயல்கள் பசியாற உண் டன. பின் நன்றி தெரிவித்து விட்டுச் சென்றன. மீதம் இருந்த வாழைப்பழங்க ளையும், தேனையும் எடுத் துக் கொண்டு தனது பயணத் தைத் தொடர்ந்தது கரடி.

வழியில் யாரோ அழு வது போல சத்தம் கேட்டது.

"யாரது?" என்றது கரடி. "நான்தான் என்றது" குர ங்கு. "என்ன அடிபட்டு விட் டதா? ஐயோ பாவம்!" என்று கூறி, அங்கிருந்த மூலிகை களைப் பறித்துக் காயத்துக் குக் கட்டுப் போட்டது.

"இந்தா, இந்த வாழைப் பழங்களைச் சாப்பிடு. தேனைக் குடி. வலிக்குத் தேன் மிகவும் நல்லது'' என்றது. நன்றி தெரிவித்து விட்டுக் குரங்கும் சென்று விட்டது.

கரடி வெறும் கையுடன் வீட்டிற்குச் சென்றது.

"என்ன ஒன்றுமே கொண்டு வரவில்லையா?" என்று கேட்ட பெண் கரடி யிடம் நடந்ததைக் கூறியது ஆண் கரடி.

"சரி நான் மீண்டும் சென்று உணவினைக் கொண்டு வருகிறேன்'' என்று புறப்பட்டது கரடி. "வேண்டாம் மழை வரு வது போல இருக்கிறது. நாளை போகலாம்" என்ற பெண் கரடியிடம், "வேலை பார்ப்பதற்கு நேரம் காலம் பார்க்கக் கூடாது" என்று கூறியவாறு கதவைத் திறந் தது கரடி.

வெளியில் குரங்குகள் கூட்டமாக நின்றிருந்தன.

"நீங்கள் எங்கள் இளவரசனைக் காப்பாற்றி, உதவி செய்து இருக்கிறீர் கள்! அதற்கு நன்றி சொல் லும் விதமாக நாங்கள் நிறையப் பழங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும்" என மிகப் பணிவுடன் கேட்டுக் கொண்டன.

கரடிகளும் அவற்றை நன்றியுடன் வாங்கிக் கொண்டன.

## செய்ந்நன்றி மறவோம்

"நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா - நின்று தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலை யாலே தான் தருதலால்" என்று செய்நன்றி மற வாமைக்கு எடுத்துக் காட்டிக் கூறுகின்றார் ஔவையார்.

ஒருவர் செய்த நன்றியை நாம் உயிருள்ளவரை மற த்தல் கூடாது. செய்யப்பட்ட உதவி சிறிதாயினும் அதனை நாம் பெரிதாக மதித்துப் போற்றுதல் வேண்டும்.

தென்னம்பிள்ளைக்கு நீர் ஊற்றி வளர்க்கிறோம். அது உடனே நமக்குப் பயன் தரும் என்று எதிர் பார்ப் பதில்லை. ஆனால் அது வளர்ந்ததன் பின்னர் அடி வேர்களினால், தான் உண்ட நீருக்குப் பதிலாக இனிமை யான இளநீராக நமக்குத் தந்துதவுகிறது. தாளுண்ட நீரைத் தலையாலே தரு கின்றது என்கிறார் ஔவை யார். எனவே பயனை எதிர் பார்த்து நாம் பிறருக்கு உதவி செய்தல் கூடாது. பயன் கருதாது செய்யும் உதவியே உதவியாகும்.

பிறர் நமக்குச் செய்யும் சிறிய உதவியையும் நாம் மறக்கக்கூடாது. சிறிய உதவி யேயாயினும் தக்க தருணத் தில் அது நம்மைக் காத்திட உதவிடலாம். எனவே தான் திருவள்ளுவரும் "காலத்தி னாற் செய்த நன்றி சிறிதெ னினும், ஞாலத்தின் மாணப் பெரிது" என்கிறார்.

தக்கதருணத்தில் செய்யப் பட்ட உதவி சிறிதாயினும் அது இப் பூமியிலும் பெரிதா கக் கருதிப் போற்றப்படவேண் டும் என்பது வள்ளுவர் வலி யுறுத்தும் கருத்தாகும்.

இதனை ஒரு உதாரணம் மூலம் விளங்கிக் கொள்ள லாம். தாகத்தால் தவிக்கும் ஒருவனுக்கு எவ்வளவு பொன் னைக் கொடுத்தாலும் அவ னது தாகம் தணியப் போவ தில்லை. அவ் வேளையில் அவனுக்குச் சிறிதளவு நீரைக் கொடுத்தாலே போதுமானது. அவ்வேளையில் அச் சிறித ளவு நீரின் பெறுமானம் பொன் னைவிட உயர்ந்த பெறுமா னம் மிக்கதாகும்.

இதன்மூலம் தக்க தரு ணத்தில் செய்யும் உதவியே மிகமிகப் பெரியது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

நமது பெற்றோர் கைம் மாறு கருதாது நமக்கு எவ்வ ளவோ உதவிகளைச் செய்கி றார்கள். அவர்கள் செய்த உதவிகளை நாம் வாழ்நாள் முழுவதும் நன்றியுடன் போற்ற வேண்டும். அவர்களைக் கண்கண்ட தெய்வங்களாக மதிக்க வேண்டும். இதனா லேயே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என ஆன் றோர்கள் சொல்லி வைத்தனர்.

பிறர் நமக்குச் செய்த உத வியை ஒருபோதுமே மறக் கக்கூடாது. எதனையும் நாம் மறந்து போகலாம். ஆனால் செய்நன்றியை நாம் மறத்தல் ஆகாது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னும் வள்ளுவர் வாக்கும் இதனையே வலியுறுத்துகிறது.

நன்றிமறவாது நல்லவர் களாக வாழ்வோம்.

## பழமொழிகளும் விளக்கமும்

- வீட்டுக்கு வீடு வாசப்படி!!

**பொருள்:-**

ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு பிரச்சினை இருக்கும்.

**உண்மையான பொருள்:-**

மேன்மையான வாழ்க்கை என்னும் வீட்டுக்கு ஆன்மீ கம் என்னும் வீடு தான் வாசற்படி என்பதே சரியான பொருள்.

- கல்லைக் கண்டா, நாயைக் காணோம்! நாயைக் கண்டா, கல்லைக் காணோம்!!

**பொருள்:-**

நாயை பார்க்கும் போதெல்லாம் அதை அடிக்க கல் அகப் படுவதில்லை. அதுபோல கல்லை காணும் போதும் அடி வாங்க நாய் சிக்குவதில்லை.

**உண்மையான பொருள்:-**

கோவிலில் கால பைரவர் சந்நிதியில் நாயின் சிலை செதுக்கப்பட்டிருக்கும். அதை கலை கண்ணொடு பார்த் தால், நாய் போல தெரியும் வெறும் கல் என நினைத் தால், நாய் தெரியாமல் கல் தான் தெரியும். எந்த ஒரு செயலும் தெரிவது/செய்வது, அவரவர் பார்வையில்/ செயலில் தான் உள்ளது.

புகழ் பூவைப் போன்றதுதான். பூவின் வாசனையை நுகரலாம். பூவையே சாப்பிடக்கூடாது.

~ ஸ்வெக்டேட்டர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அதிகாரம் இல்லாத கண்காணிப்பு எதற்கு?

மன்னாரப் புதைகுழியில் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் சுமார் 300 - 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்ற காபன் பரிசோதனை அறிக்கை ஒரு பெரும் உண்மையை எடுத்துரைக்கிறது.

அதாவது இலங்கை அரசின் அதிகாரத்துக்குட்பட்டு எது நடந்தாலும் அது தமிழ் மக்களுக்கு எப்போதும் எதிராகவும் பாதகமாகவுமே இருக்கும்.

அந்த அடிப்படையில் தான் மன்னாரப் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மீதான காபன் பரிசோதனை அறிக்கையும் மிகத் தெளிவாக திட்டமிட்ட அடிப்படையில் உண்மையை மறைப்பதாக அமைந்துள்ளது.

மன்னார் புதைகுழியில் தோண்டி எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் விவகாரம் உலகறிந்த சம்பவம்.

இருந்தும் அதனைக்கூட 300 தொடக்கம் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கூறப்படுகிறது என்றால், இலங்கை அரசின் ஏற்பாட்டில் பரிசோதனைகளும் விசாரணைகளும் நடந்தால் நிலைமை என்னவாக இருக்கும் என்பதை எவரும் தீர்மானிக்க முடியும்.

தவிர, மன்னாரப் புதைகுழி விவகாரம் குறித்த காபன் பரிசோதனை அறிக்கை அரசுடன் சேர்ந்து நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விழுந்த பலத்த அடியாகும்.

அதாவது அரசாங்கத்தைக் காப்பாற்றுகின்ற முயற்சியில் அதீதமாக கூட்டமைப்பு ஈடுபட்டபோதிலும் அரசின் செயற்பாடு தமிழ் மக்களுக்கு எதிராகவே அமைந்துள்ளது.

ஆக, எவ்வளவுதான் தமிழ்த் தரப்புகள் அரசுடன் இணங்கிச் சென்றாலும் அரசின் ஒவ்வொரு கட்டச் செயற்பாடுகளும் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே உள்ளது.

எனவே இணங்கிச் சென்று எமது உரிமைகளைப் பெறலாம் என்பது அடிப்படையிலேயே தோற்றுப் போகிறது.

இவை ஒருபுறமிருக்க, மன்னாரப் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகள் மீது செய்யப்பட்ட காபன் பரிசோதனை அறிக்கையானது கண்கண்ட உண்மையைக் கூடத் தவிடுபொடியாக்கியுள்ளது.

நிலைமை இதுவெனில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு மீண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டால், அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படுமா என்ன?

எனவே கால அவகாசம் வழங்குவது என்பதைத் தடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மும்முரமாகச் செயற்பட வேண்டும்.

கால அவகாசம் கொடுக்காவிட்டால், இலங்கை மீதான ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் மேற்பார்வை இல்லாது போய்விடும் எனக் கூட்டமைப்புக் கூறுகிறது.

இவ்விடயத்தில் நாம் கேட்பதெல்லாம் நிபந்தனையை நிறைவேற்றத் தவறிய நாட்டின் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் ஐ.நா அமைப்புக்கு இல்லையென்றால், அதிகாரம் இல்லாதவர்களின் மேற்பார்வையால் என்ன நன்மை ஏற்படப் போகிறது.

ஆக, இலங்கை அரசு இணங்கிக் கொண்ட நிபந்தனைகளை நிறைவேற்ற மேலும் கால அவகாசம் கொடுக்கப்பட்டால் மன்னார் எலும்புக்கூடுகளுக்கு நடந்த கதிதான் அதற்கும் நடக்கும்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு சர்வமதத் தலைவர்கள் கோரிக்கை

(ஏறாவூர்)

வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் சர்வமதங்களின் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 19ஆம் திகதி காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வடக்கு மற்றும் கிழக்கில் கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த போராட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மட்டக்களப்பு மாவட்ட சர்வமத தலைவர்கள் இந்த வேண்டுகோளை முன்வைத்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் காணாமல்போனவர்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அவர்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் அன்றைய தினம் வர்த்தக நிலையங்களை மூடியும் போக்குவரத்துகளை இடைநிறுத்தியும் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் இடம்பெறவுள்ள பேரணிக்கு ஒத்துழைப்பு தருமாறு மதத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

## இரும்பு வியாபாரியை மறித்த பொலிஸாருக்கு காத்திருந்த அதிர்ச்சி

வவுனியா ஓமந்தையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவித்த பொலிஸார்.

நேற்று மாலை ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் கடமையில் இருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரும்பு வியாபாரத்தில் ஈடுபடும் நபர் ஒருவரை வழிமறித்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது அவரிடமிருந்து 45 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டதாகவும் 55 வயதான நபரை கைது செய்துள்ளதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் தமது கட்டுப்பாட்டில் எடுத்து சென்றுள்ளதாக தெரிவித்த பொலிஸார் கைது செய்யபட்ட நபர் இன்றைய தினம் நீதி மன்றில் ஆஜர் படுத்தபடவுள்ளதாகவும்மேலும் தெரிவித்தனர். (மு-3)

## வெள்ளிக்கிழமைகளிலேயே அதிகளவான விபத்துக்கள்

### பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமைகளிலேயே அதிகளவான விபத்துக்கள் இடம்பெறுவதாக பொலிஸ் த்லைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸ்தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "பொதுவாக நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களானது அதிகமாக வெள்ளிக்கிழமைகளிலேயே இடம்பெறுகின்றது.

குறித்த விபத்துக்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 8 மணி வரையான நேரத்திற்குள் இடம்பெறுகின்றன.

கடந்தாண்டு இடம்பெற்ற 35,000 விபத்துக்களை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, 20 தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்ட சாரதிகளே இந்த விபத்துக்கு காரணமாக இருந்துள்ளனர்" எனவும் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

## கழுத்தை நெரித்து மயங்கிய நிலையில் ஓய்வுநிலை ஆசிரியை கொடிகாமத்தில் மீட்பு

கொழும்பில் வசிக்கும் ஓய்வுநிலை ஆசிரியையான மூதாட்டி ஊரில் உள்ள தாயாரையும் உறவினர்களையும் பார்வையிட நேற்று முன்தினம் வந்துள்ளார். மாலையானதும் கொடிகாமம் சென்று உணவுப் பொருட்களை வாங்கிக் கொண்டு இருள்சூழும் நேரம் வீடு நோக்கி நடந்து சென்ற வேளையில் அவ்வழியே வந்த உறவினர் ஒருவர் தனது கழுத்தை நெரித்து கொலை செய்ய முயன்றதுடன் தாக்கியும் உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் எருவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மயக்கமடைந்த நிலையில் காணப்பட்ட தன்னை அப் பகுதியில் உள்ள அயலவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர் என பாதிக்கப்பட்ட ஓய்வுநிலை ஆசிரியை தெரிவித்தார்.

தனது சொத்தினை அபகரிக்கும் நோக்கில் தன்னை கொலை செய்யும் நோக்குடன் கழுத்தை நெரித்துள்ளார் எனவும் தான் மயங்கி வீழ்ந்ததால் கைவிட்டுச் சென்றுள்ளார் என பொலிஸாரிடம் தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை **யாழ். பிரதேசத்தில** காங்கேசன் துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன் காமம், பலாலி, காங்கேசன் துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு கால விடுதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** குமுழமுனை, கரியாலைபடுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், ஜெயபுரம், வேராவில், வலைப்பாடு, 651வது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** பெரிய கரைசல் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உலக சகோதரத்துவம்



மூன்று மறைபொருள்களாகிய தெய்வம், உயிர், சீவகாந்தம் ஆகிய இவற்றைப் பற்றிச் சரியாக விளங்கிக் கொள்ளாததனாலேயே, மனித இனம் பெரும்பாலும் முடிவில்லாத துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. கல்வி முறையின் மூலமாக இந்த மூன்று மறைபொருள்களைப் பற்றிய விளக்கமானது தெளிவாக எல்லோருக்கும் கொடுக்கப்பட்டால் தான், மனித இன முன்னேற்றம் என்பது நடைமுறையில் சாத்தியமாகும்.

ஒவ்வொரு தனி நபரும், பொருளாதாரம், அரசியல், சுகாதாரம், அறிவியல் ஆகிய பல்வேறு கோணங்களிலே இந்தப் பரந்த உலகத்தோடு ஒரு இடைவிடாத தொடர்பை எப்போதும் வைத்துக் கொண்டிருக்கிறார். யாராவது ஒரு தனி நபர் இத்தகைய அறிவு விளக்கத்திலோ அல்லது வாழ்க்கை ஒழுக்கத்திலோ பின்தங்கி இருப்பாரானால், அது தொடர் நிகழ்ச்சி போல குடும்பம், சமுதாயம், உலகம் என்ற அளவில் மனித குலத்துக்குப் பெரிய அளவில் மிக மோசமான பாதிப்பை உண்டாக்கும்.

ஆகவே, உலகில் வாழும் ஒவ்வொருவரின் நலத்திற்காகவும், மனித சமுதாயம் முழுவதும் அறிவு வளமும், மன வளமும், உடல் நலமும் நிறைந்ததாக இருக்க வேண்டும். உலக சகோதரத்துவம் (Universal Brotherhood) என்பது ஒரு பேச்சளவில் இருக்கிற கொள்கையாக இருக்கக் கூடாது. அது மெய்ஞ்ஞானிகளாலும், விஞ்ஞானிகளாலும், சிந்தனையாளர்களாலும் வரையறுத்துச் சொல்லப்பட்ட உண்மை உணர்வாக இருக்க வேண்டும். உலகில் வாழும் ஒவ்வொரு மனிதருடைய அனுபவ அறிவாக அறிவாட்சித் தரமாக அமைய வேண்டும்.





கிளி/ தருமபுரம் புதிய உதயம் முன்பள்ளியின் பாலர் விளையாட்டு விழா கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை முன்பள்ளி நிர்வாகி சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

# தினமும் என்னை மேம்படுத்துகிறேன் மற்றவை என்கையில் இல்லை-அஸ்வின்



காபி வித் கரண்' நிகழ்ச்சியில் கலந்துகொள்வீர்களா என்று ரசிகர் கேட்ட கேள்விக்கு இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் பதில் அளித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களான ஹர்திக் பண்ட்யா, கே.எல்.ராகுல் ஆகிய இருவரும் 'காபி வித் கரண்' எனும் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பொலிவுட் இயக்குநர் கரண் ஜோஹர் அந் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

அப்போது பெண்கள் குறித்து அவர் கேட்ட கேள்விக்கு ஹர்திக் பாண்ட்யா சர்ச்சைக்குரிய வகையில் பதிலளித்தார். இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் விவாதப் பொருளானதைத் தொடர்ந்து. வீரர்கள் இருவரையும் பி.சி.சி.ஐ நிர்வாகம் இடைநீக்கம் செய்தது.

மேலும், இதுபோன்ற நிகழ்ச்சிகளில் வீரர்கள் கலந்து கொள்வது குறித்து அதிருப்தியையும் தெரிவித்தது. இந்நிலையில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின், இன்ஸ்டாகிராமில் ரசிகர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

அவற்றில் அஸ்வினின் கிரிக்கெட் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை குறித்தும் கேள்விகள் இருந்தன. அப்போது ரசிகர் ஒருவர் 'காபி வித் கரண் நிகழ்ச்சியில் கலந்துகொள்வீர்களா?' என்று கேள்வியெழுப்பினார்.

அதற்கு அஸ்வின் 'கண்டிப் பாக' என்று பதிலளித்தார். அஸ்வினின் இந்த பதில் ரசிகர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அத்துடன் 'மீண்டும் ஒரு நாள் போட்டி, இருபது- 20 போட்டிகளில் விளையாடுவீர்களா?' என்ற கேள்விக்கு, 'தினந்தோறும் என்னை மேம்படுத்திக் கொண்டே இருக்க முயற்சிக்கிறேன். மற்றவை என் கையில் இல்லை' என தெரிவித்தார். (க)

# தல இல்லாவிட்டால் நாம் யாருமே இல்லை



டோனி இல்லை என்றால் நாங்கள் இல்லை என்று இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா அணி அங்கு இருபது-20 மற்றும் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் இருபது-20 தொடரை இந்திய அணி கைப்பற்றிய நிலையில், ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் மூன்று போட்டிகள் முடிந்துள்ள நிலையில் 2-1 என்று இந்திய அணி முன்னிலையில் உள்ளது.

இந்த தொடரில் டோனி அந்தளவிற்கு பெரிய ஆட்டம் கொடுக்காத காரணத்தினால், அவருக்கு அடுத்த இரண்டு போட்டிகளில் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. டோனியை ஓரங்கட்டுவதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் குல்தீப யாதவ், இளம் வீரர்கள் அனைவரின் சிறப்பான ஆட்டத்திற்கு பின்னாலும் டோனியின் ஆலோசனைகள் நிச்சயம் இருக்கும்.

உலகின் மிகச்சிறந்த விக்கெட் கீப்பரை நாம் பெற்றுள்ளோம். கிரிக்கெட்டில் அவரது அனுபவங்கள் ஏராளம்.

இளம் வீரர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும், ஊக்கங்களையும் டோனி எப்பொழுதும் கொடுத்து கொண்டே இருப்பார். என்னை போன்ற சுழற்பந்து வீச்சாளர்கள் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த பந்துவீச்சாளர்களுக்குமே டோனியின் அறிவுரை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறியுள்ளார். (க)

# ஏ தர ஒப்பந்தத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்ட புஜாரா



இந்திய கிரிக்கெட் வாரியம் ஆண்டுதோறும் இந்திய அணி வீரர்களுக்காக 'ஏ' பிளஸ், 'ஏ', 'பி' மற்றும் 'சி' ஆகிய பிரிவுகளில் ஊதிய ஒப்பந்தத்தை வெளியிடும். இந்த ஆண்டுக்கான ஊதிய ஒப்பந்தம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ரூ.7 கோடி ஊதியம் வழங்கும் 'ஏ' பிளஸ் பிரிவில் தலைவர் விராட் கோலி, ரோகித் சர்மா, பும்ரா ஆகிய 3 பேர் மட்டுமே இடம் பெற்றுள்ளனர்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி டெஸ்ட் தொடரை இந்திய அணி முதன்முறையாக கைப்பற்றியது. இதில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் புஜாரா ஆட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. அவர் 3 சதங்களுடன் 521 ஓட்டங்கள் குவித்தார்.

இதனால் புஜாரா கிரிக்கெட் வாரிய ஊதிய ஒப்பந்தத்தில் 'ஏ' பிளஸ் பிரிவில் இடம்பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 'ஏ' பிரிவில்தான் (ரூ.5 கோடி) இடம் பெற்றுள்ளார். அவருக்கு 'ஏ' பிளஸ் பிரிவு தரம் உயர்வு அளிக்கப்படவில்லை.

இதுதொடர்பாக கிரிக்கெட் வாரிய முன்னாள் செயலாளர் நிரஞ்சன் ஷா கூறும்போது, "புஜாராவுக்கு ரூ.7 கோடி சம்பளம் கிடைக்கும். 'ஏ' பிளஸ் ஒப்பந்தம் வழங்கப்படாதது வேதனை தருகிறது..

டெஸ்ட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் தராத வகையில் கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாக குழு செயற்பாடு உள்ளது" என்று தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார்.

ஏற்கனவே அணி நிர்வாகத்துடன் விவாதிக்கப்பட்டுள்ளது" என்று பதில் வருகிறது.

டெஸ்ட் போட் டியில் மட்டுமே விளையாடி வரும் புஜாராவிற்கு ஏ பிளஸ் பிரிவு கொடுக்காதது சர்ச்சையை கிளப்பியுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இந்திய வீரர்களின் தலைகளில் இராணுவத் தொப்பி பொறுத்துக் கொள்ள முடியாது; பொங்கியெழும் பாகிஸ்தான்



இந்திய வீரர்கள் கிரிக்கெட் விளையாடும் போது இராணுவ தொப்பி அணிந்தது குறித்து ஐசிசியிடம் பாகிஸ்தான்அமைச்சகம் புகார் தெரிவித்துள்ளது.

புல்வாமா தாக்குதலில்இறந்த இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்திய வீரர்கள் அவுஸ்திரேலியாவுடனான மூன்றாவது ஒருநாள் போட்டியின் போது இராணுவ வீரர்கள் அணியும் தொப்பியை அணிந்து விளையாடினர்.

மேலும் இந்த ஆட்டத்தின் மூலம் கிடைக்கும் ஊதியமும் இறந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வழங்வும் இந்திய அணியினர் முடிவு செய்திருந்தனர்.

ஆனால், இந்திய அணியினர் இராணுவ தொப்பி அணிந்து கிரிக்கெட் விளையாடியதை பாகிஸ்தான் அமைச்சர்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. எனவே, இந்திய அணி மீது ஐசிசி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# ஐ.நா மனித உரிமைகள் சபையில்...

தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மக்கள் தொடர்பு பணிமனை திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை வைத்தார்.

தமிழ் மக்கள் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் திறக்கப்படும் முதலாவது மக்கள் தொடர்புப் பணிமனை இதுவாகும். இந்த நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறுவதில் முக்கியத்துவம் இருக்கின்றது. தமிழ் மக்களின் போராட்ட காலங்களில் கிளிநொச்சி மாவட்டம் பல வகிபாகங்களை வகித்திருக்கின்றது. யுத்த காலங்களில் இலட்சக் கணக்கான எமது மக்கள் குடா நாட்டில் இருந்து இடம்பெயர்ந்தபோது கிளிநொச்சியில் தான் அடைக்கலம் புகுந்தார்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் தன்னிறைவு பொருளாதார வளங்களே இந்த மக்களுக்கான உணவு, உறையுள் என்பவற்றை வழங்கி அவர்களைப் பாதுகாத்தது.

தமிழர்களின் சமூக மேம்பாட்டுக் கட்டமைப்புக்களின் தலைமையகமாகவும் தமிழர்களின் அரசியல் கோட்டையாகவும் கோலோச்சிய கிளிநொச்சி மாநகரம் தொடர்ந்தும் கொள்கை வழிநின்று, இனவாத சக்திகளினதும் அதற்குத் துணைபோகும் தரப்புகளினதும் சதிவலைகளை முறியடித்து மண்ணின் மகத்துவத்தைக்காத்து, தமிழ்த் தேசிய விடுதலையை முன்னெடுப்பதில் முன்னுதாரணமாக நீங்கள் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையிலேயே கிளிநொச்சியில் இன்று (நேற்று) இந்தப் பணிமனை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான தமிழ் மக்கள் கூட்டணியின் அரசியல், பொருளாதார, சமூக ரீதியான செயற்பாடுகளில் கிளிநொச்சி மக்கள் முழுமையான அளவில் பங்குபற்றி எம்மை பலப்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். எமது மக்களுக்கு எதிரான இனப்படுகொலை திட்டமிடப்பட்டவகையில் வன்னியில் மேற்கொள்ளப்பட்டபோதும் பீனிக்ஸ் பறவை போல புத்துயிர்பெற்று இன்றைய தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தின் முதுகெலும்பாக வன்னி மக்கள் செயற்பட்டு வருவதைக் கண்டு நான் வியப்படைந்துள்ளேன். பல வருடங்களாக வீதிகளில் நின்று நீங்கள் பற்றுறுதியுடன் மேற்கொண்டுவரும் பல்வேறு போராட்டங்களைக் கண்டுகொண்டு தான் இருக்கின்றேன். அத்துடன் கண்டு நான் உள்ளக்கிளர்ச்சி அடைந்திருக்கின்றேன். உங்கள் போராட்டங்கள் ஒருபோதும் வீண் போகாது. உங்கள் போராட்டங்களுக்கான எம்மாலான உதவிகளை வழங்கும் வகையிலும் உரிமைகளை வென்றடுப்பதற்கான எமது செயற்பாடுகளுக்கு உங்களின் உதவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலுமே இன்று (நேற்று) இந்தப் பணிமனை திறந்துவைக்கப்படுகிறது.

பார்த்தேன் ஞாபகமில்லை. கேட்டேன் மறந்துவிட்டேன். செய்தேன் நிலைத்து விட்டது என்பது ஒரு சீனப்பழமொழி. அதேபோல இன்று (நேற்று) இந்தப் பணிமனை திறந்து வைக்கப்படுவதன் பின்னால் பல கரங்கள் உழைத்திருக்கின்றன.

மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினை நிறைவேற்றாமல் பல்வேறு ஏமாற்று வழிமுறைகளை இலங்கை அரசாங்கம் கையாண்டு ஏமாற்றிவந்த நிலையில் அவற்றுக்கு எதிராக தொடர்ச்சியாக உண்மை நிலைமைகளை எடுத்துக்கூறி நீங்கள் மேற்கொண்ட போராட்டங்களும் அரசியல் செயற்பாடுகளுமே ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் சில சாதகமான விடயங்கள் உள்ளடக்கப் படுவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன. இலங்கையில் என்ன நடைபெற்றுவருகின்றன, உண்மை நிலைமை என்ன, மக்களின் உணர்வுகள் என்ன என்பவை எல்லாம் சர்வதேச சமூகத்துக்கு எட்டியிருக்கின்றது என்பதையே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்தப் பரிந்துரைகள் காட்டுகின்றன.

அதாவது, போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகத்தன்மையான உள்ளக விசாரணை நடைபெறவில்லை என்பதால் போர்க்குற்றம் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்து வழக்கு தொடரும் நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தனது இலங்கை தொடர்பான அறிக்கையில் உறுப்பு நாடுகளுக்கு பரிந்துரைத்திருக்கின்றது.

சித்திரவதை, வலிந்து காணாமல் செய்யப்படுதல், போர்க்குற்றங்கள் அல்லது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை குறிப்பாக சர்வதேச நியாயாதிக்க கோட்பாடுகளுக்கு அமைவாக விசாரணை செய்து வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் மனித உரிமைகளை கண்காணிப்பதற்கும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் சபை, மற்றும் ஏனைய மனித உரிமைகள் பொறிமுறைகள் ஆகியவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றும்பொருட்டும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்துக்கு அழைப்பு விடுக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவையில் ஒரு தீர்மானத்தினைக் கொண்டு வந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட பல தரப்புக்களுக்கும் நாம் அனுப்பிய தீர்மானத்தில் இந்த விடயங்களையும் உள்ளடக்கியிருந்தோம்.

இவை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பரிந்துரைகளை நாம் வரவேற்கிறோம். அதே வேளை, இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லவேண்டும் என்றும் நாம் எமது தீர்மானத்தில் வலியுறுத்தி இருக்கின்றோம். ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினை இலங்கை நிறைவேற்றுவதற்கு தவறி இருக்கும் நிலையில் இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லவேண்டியதன் அவசியத்தை சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழுவும் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை விடயம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் சபை விசேட பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் எனப் பல தமிழ்க் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

ஆகவே எமது இந்த வலியுறுத்தல்கள் நடைமுறைக்கு வரும் வகையில் இங்குள்ள தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் தமது அரசியல், ராஜதந்திர செயற்பாடுகளை வகுத்து செயற்பட வேண்டும்.

எம்மோடு பயணிக்க அனைவரையும் அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றேன் என்றார். (மு-3)

# விண்ணாதி விண்ணர்கள்...

கோரியுள்ளார்.

இந்த ஊடக சந்திப்பை ஏற்படுத்தியதற்கான நோக்கம், ஐ.நாமனித உரிமைகள் உயர் ஸ்தானிகருடைய இலங்கை சம்மந்தமான அறிக்கை 8 ஆம்திகதி வெளியிடப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னரே இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

34/1 என்கின்ற தீர்மானத்தின் அடிப்படையிலே, இரண்டு வருட காலம் முடிவடைகிற பொழுது எழுத்து மூலமான அறிக்கையொன்று கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையிலே இந்த அறிக்கை வெளியிடப்பட்டு இருக்கிறது. இதிலே பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

இந்தத் தடவை ஜெனிவாவிலே இலங்கை சம்மந்தமாக இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதனை இன்னொரு காலத்திற்கு அது ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடத்திற்கு மேற்பார்வை செய்கிற ஆணை மனித உரிமை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு கொடுக்கப்பட வேண்டும். எங்கள் மக்கள் சார்பில் நாங்கள் திடமாகச் சொல்லுகிற செய்தி இதுவாகவே இருக்கிறது.

ஆனாலும் கால அவகாசம் கொடுக்காதே கொடுக்காதே என்று பொய்யான ஒரு சுலோகத்தை உச்சரித்துக் கொண்டு சர்வதேச மேற்பார்வையை மழுங்கடிக்கின்ற செயற்பாட்டிலே ஈடுபட்டிருக்கின்றவர்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். பொறுப்பெடுத்துக் கொண்ட விடயங்களை இலங்கை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பது தான் எங்கள் நிலைப்பாடு" என்றார்.

இதன் போது தமிழ்த்தரப்புக்களும் மனித உரிமைகள் பேரவையிலிருந்து பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்ல வேண்டுமெனக் கூறுகின்ற நிலையில், கூட்டமைப்பு வேறு நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றதே என கேள்வியெழுப்பப்பட்டபோது நாங்கள் கால அவகாசம் கொடுக்குமாறு கடந்த தடவையோ இந்தத் தடவையோ கேட்கவில்லை. ஆனால் மிகத் தெளிவாக நாங்கள் கேட்பது சர்வதேச மேற்பார்வையை தயவு செய்து நீடியுங்கள் என்று தான். சர்வதேச மேற்பார்வையை நீடிக்காமல் விட்டால் இந்த விடயத்தை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கையாளவே முடியாது. மனித உரிமை உயர்ஸ்தானிகருக்கு அதனைக் கையாள்வதற்கான ஆணை இல்லாமல் போய்விடும்.

ஆகவே சர்வதேச மேற்பார்வையை நீடிக்கும் வகையிலே புதிய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதே எங்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது. இலங்கை அரசாங்கம் அவர்களிடத்தே இன்னும் கொஞ்சம் காலம் தந்தால் அதனைத் தாங்கள் செய்து முடிப்பதாகக் கூறுவது வேறு விடயம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையிலே சர்வதேச மேற்பார்வை நீடிக்கப்படுவது அத்தியாவசியமான ஒரு செயற்பாடு. அது இல்லாமல் விட்டால் இலங்கை அரசாங்கத்தை கையாள்வதற்கு வேறு எந்தப் பொறிமுறையும் இப்பொழுது கிடையாது.

மனித உரிமைகள் பேரவையில் இருந்து பாதுகாப்புச்சபைக்கு கொண்டு போவதில் எவ்வாறான தடைகள் இருக்கின்றாக கருதுகிறீர்கள் என கேள்வி யெழுப்பப்பட்டபோது மனித உரிமைப் பேரவையில் இருந்து பாதுகாப்புச்சபைக்குப்போக வேண்டிய அவசியம் இல்லை. பாதுகாப்புச் சபைக்கு போக வேண்டுமாக இருந்தால் பாதுகாப்புச் சபைக்கு போகலாம். ஆனபடியால் இதைக்கைவிட்டுத்தான் அங்கு போக வேண்டுமென்று சொல்வது ஒரு பொய்யான பிரசாரம். ஆனபடியால் தான் நாங்கள் சொல்லுகின்றோம் பாதுகாப்புச்சபைக்கு போவது எங்களுக்கும் விருப்பம். அதனைச் செய்ய முடியுமாக இருந்தால் அதனைச் செய்வோம்.

ஆனால் கையிலே இருக்கிற பொறிமுறையை கைவிட் டுத்தான் அதனைச் செய்ய வேண்டு மென்பது பச்சைப் பொய்தான்.

பாதுகாப்புச் சபைக்கு போவதிலே பல தடைகள் உண்டு. இந்த மனித உரிமைகள் பேரவையிலே ஒரு நாட்டைக் கட்டுப்படுத்தாத தீர்மானங்களை நிறைவேற்றுகிற மனித உரிமைப்பேரவையிலே கூட இலங்கை சம்பந்தமான ஒரு தீர் மானத்தை நிறைவேற்றுவது எவ்வளவு கடினமாக இருந்தது என்பது எங்களுக்கு தெரியும்.

இந்த பிரேரணையை ஆதரித்தது 24 நாடுகள் தான். அப்பவே 47 நாடுகளில் 24 நாடுகளின் வாக்குகளைத்தான் எடுத்தோம். இப்படியான ஒரு அரங்கிலே ஒரு நாடு சம்பந்தமாக தீர்மானமொன்றை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முன்னின்று செயற்பட்டும் இவ்வளவு கஸ்டப்பட்டு அத் தீர்மானம் நிறைவேற்றப்படுமாக இருந்தால், பாதுகாப்பு சபையிலே ஒரு நாட்டைக்கட்டுப்படுத்தும் தீர்மானத்தில் பெரும்பான்மையைப் பெறுவதே கடினமான விடயம்.

இதற்கு அடுத்ததாக வீட்டோவைப் பற்றி பார்க்க வேண்டும். ரஷ்யா மற்றும் சீனாவை பொறுத்தவரையில் நிச்சயமாக எதிராக வாக்களிப்பார்கள். அது தான் அவர்களுடைய நிலைப்பாடு. அவர்கள் மனித உரிமைகள் பேரவையிலே வாக்கெடுப்பு நடந்த போதெல்லாமல்கூட எதிராக வாக்களித்தது மட்டுமல்ல எதிராக மிக உக்கிரமாக பேசியும் இருக்கின்றார்கள்.

ஆகவே பாதுகாப்புச் சபையினூடாக குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியுமாக இருந்தால்அது வரவேற்கத்தக்கது. அது ஒரு நல்ல முன்னேற்றம். நாங்கள் அதனைச்செய்யக்கூடாதென்று எந்தக் காலத்திலும் சொல்லவில்லை. செய்ய முடியுமானால் செய்யலாம். அதற்கு உகந்த நடவடிக்கைகளை நாங்களும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்றார். (மு-3)

# இந்திய வியா...

இரவு கைதுசெய்து நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரிடமும் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதுடன், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளதாக மேலும் தெரிவித்தனர். (மு-101)

# சப்ரகமுவ...

நீரைக் கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு பலர் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

# எரிபொருளின் விலை கூடலாம்...

விலைகள் அதிகரித்து வருகின்ற நிலையிலேயே மீண்டும் அதிகரிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம் விலை சூத்திரத்தின் அடிப்படையில் ஒக்டேன் 92 ரக பெற்றோல் 6 ரூபாயினாலும் ஒக்டேய்ன் 95 ரக பெற்றோல் 5 ரூபாயினாலும் ஒட்டோ டீசல் 4 ரூபாயினாலும் சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 8 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-3)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதியில் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அண்மை யில்) ஒரு பரப்பு 2 குளி காணியில் புதிதாக வாஸ்து முறைப்படி வடக்கு வாசல் கொண்டு சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு :

0770767114, 0766003303


## கொவிசெத

திகதி 2019.03.10
சீட்டிழுப்பு இலக்கம் 2059
ஆங்கில எழுத்து R
வெல்லப்பட்ட இலக்கங்கள் 22 46 58 66

## மஹஜன சம்பத

திகதி 2019/03/10
சீட்டிழுப்பு இலக்கம் 3872
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 6 9 3 6 3

## நீரோகா

திகதி 2019/03/10
சீட்டிழுப்பு இலக்கம் 522
லக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 04 30 45 69 35

## தன நிதானய

திகதி 2019/03/10
சீட்டிழுப்பு இலக்கம் 0125
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 23 32 59 69

தேசிய லொத்தர் சபை

கட்டார் வேலைவாய்ப்பு

நகைக்கடை விற்பனை பிரதிநிதிகள் சம்பளம் ரூ 70,000/-

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists

License No. 2268

விரைவில் பயண ஏற்பாடு

077 00 38 215 ☎ 021 221 9 221 (C-5745)

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



## வாடகைக்கு தேவை

அச்சுவேலியில் வீடு/வீட்டுடன் இணைந்த அறை வாடகைக்கு தேவை. அச்சுவேலியில் வேலை செய்யும் முகாமையாளருக்கு கைத்தொழில் பேட்டையை அண்டிய இடத்தில் வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு : 077 315 1654** (C-5743)


## விபத்துக்களில் சிக்கி...

காலை திரும்பிய வேளையில் மீசாலைப் பகுதியில் முந்த முயன்ற மகிழூர்தி உந்துருளியை மோதியதில் அதில் பயணித்த கோண்டாவில் நாராயணா சாலையைச் சேர்ந்த ஆசீர்வாதம் ஜோன்சன் (வயது 44) அவரது மகனான ஜோன்சன் பிளசிட் (வயது 8) ஆகியோர் காயமடைந்தனர்.

இதே வேளை நேற்று முன் தினம் சகோதரனை ஏற்றிக் கொண்டு உந்துருளியில் சென்ற வேளையில் சில்லு சறுக்கி வீழ்ந்ததில் இருவரும் காயமடைந்தனர். எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த சக்திதர சர்மா றெஜிசேகர சர்மா (வயது 16) இவரது சகோதரனான சக்திதர சர்மா சிறிதரசர்மா (வயது 10) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மு-10.30)

## மைத்திரி - மகிந்த...

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஆகிய கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்காவிட்டால் இரு தரப்பிற்குமே வெற்றி பெற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுவேட்பாளர் தெரிவு தொடர்பாக மகிந்த அணிக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தலைமையில் கோத்தபாய ராஜபக்ஷ களமிறக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்காரணமாக இரு தரப்பிற்கும் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாக நேற்று முன்தினம் கண்டி யில் இடம்பெற்ற மகிந்த அணியின் கூட்டத்தில் பங்கேற்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடை விதித்திருந்தார்.

இந்த நிலையில் பொதுஜன பெரமுன வேட்பாளரே பொது வேட்பாளர் என பசில் ராஜபக்ஷவும் விடாப்பிடியாக உள்ளார். மேலும் இரு அணிகளுக்குமிடையில் விரிசல் அதிகரித்து வருகிறது. (மு-30)

## புதிய சட்ட...

தலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே மக்கள் விடுதலை முன்னணியினர் உள்ளோம்.

இவ்விடயத்தில் அரசியல் விடயங்களை மையப்படுத்தி தீர்மானங்களை முன்னெடுக்க முடியாது. இன்றும் பயங்கரவாத தடைச்சட்டம் இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும் ஒரு ஏற்பாடாகவே காணப்படுகின்றது. ஆகவே பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுவதற்கு நாங்கள் முழுமையான ஆதரவு வழங்குவோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்ளடக்கியுள்ள விடயங்கள் தொழில் துறையினரது உரிமைகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும்.

ஆகவே தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினை விட புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாரதூரமானது என்றார். (மு-3)

## மன்னார் மனித...

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார்மனித புதை குழி அரை நூற்றாண்டுக்கு உட்பட்டதே. இது தொடர்பான உண்மைகளை கண்டறிவதற்கு சர்வதேச மனித உரிமைகள் ஆணையம் பரிந்துரைக்கும் தடயவியல் மருத்துவர்களை கொண்டு வெளிப்படையான ஆய்வின் மூலமே உண்மைகளை வெளிக்கொண்டுவர முடியும்.

மனித எச்சங்கள் மண்ணின் தரம், தட்பவெட்ப சூழ்நிலைக்கு ஏற்ப அது பாதுகாக்கப்படும் காலம் வேறுபடும். நான் நேரில் பார்த்த தடயவியல் மருத்துவர் என்ற ரீதியில் என்னால் அந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு உட்பட்டதல்ல என்றும் அது அரை நூற்றாண்டுக்கு உட்பட்டவை என கூறமுடியும்.

இலங்கையில் இந்த ஆய்வை மேற்கொள்ளும் அளவிற்கு அனுபவமுள்ள தடயவியல் ஆய்வாளர்கள் இல்லை என்பது என் கருத்து. இவர்கள் உபயோகிக்கின்ற டேட்டிங் முறை தவிர்த்து மனித எலும்புக் கூட்டில் உள்ள பல்லை வைத்து சரியான பிறந்த நாளையே கண்டு பிடிக்க முடியும்.

சர்வதேசமனித உரிமைஆணையகம் பரிந்துரைக்கும் தடயவியல் மருத்துவர்களை கொண்டு வெளிப்படையான ஆய்வின் மூலமே உண்மையை வெளிக்கொண்டுவர முடியும் என கூறியுள்ளார். (மு-3)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்


## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (7836)



## தென்னிந்திய யாத்திரை

**தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை**

**ஆரம்பம் 22.04.2019 யாத்திரீகர் 10 நாள்கள் 16**

தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காளகஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி, பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மதுரை மீனாட்சி, மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாகுமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணி மண்டபமும் நாமக்கல் ஆஞ்சநேயர், கொல்லிமலையும் காணலாம்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாயுக்கு எமது சேவை :- இரு வழி விமான ரிக்கெட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

**மேலும் விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ்-கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்.**

தொடர்புகளுக்கு : **கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
**#59,3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11**
**T.P : 077 768 0102, 077 736 2154** (C-5741)
E-mail : sriranganathan2601@gmail.com / www.sridevipilgrims.com / F:sridevi ranganathanthuraiappa


## புதிய பயங்கரவாத எதிர்ப்பு...

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றை நாட்டில் அவசர காலச் சட்டம் இருக்கின்ற போதே பயன்படுத்த முடியும். இவ்வாறிருக்கையில், இச்சட்டத்தை சாதாரண சட்ட அந்தஸ்துக்கு மாற்றுவது ஆபத்தானது.

இவ்வாறு மாற்றும் சந்தர்ப்பத்தில் நான் இப்போது கலந்து கொண்டுள்ள இது போன்ற சாதாரண கூட்டமொன்றைக் கூட நடத்த விடாமல் தடை செய்வதற்கு ஒரு சாதாரண பொலிஸ் அதிகாரிக்கு முடியுமாகின்றது.

இதனால், இச்சட்டத்தை அங்கீகரிப்பதானது ஜனநாயகத்துக்கு எதிரானது என்பது மட்டுமல்ல, அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுக்கும் ஆபத்தானது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். 1979 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினால் மாற்றீடு செய்யப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த எதிர்ப்புச் சட்டத்தின் பாதிப்பு குறித்தே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-3)


**CUSTOMER SERVICE EXECUTIVE VACANCY**

- GOOD COMMUNICATION SKILLS IN ENGLISH IS MUST
- PROVEN CUSTOMER SUPPORT EXPERIENCE
- STRONG PHONE CONTACT HANDLING SKILLS AND ACTIVE LISTENING
- CUSTOMER ORIENTATION AND ABILITY TO RESPOND DIFFERENT TYPES OF CHARACTERS
- EXCELLENT COMMUNICATION SKILLS
- ABILITY TO WORK DAY AND NIGHT SHIFT

**071 121 4977 / 021 222 7077**
**careers.penguin@gmail.com** (7837)



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS (C-5736)

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413 (C-5737)



## க.பொ.த உயர்தர பரீட்சைக்குப் பின்னர் வாழ்வின் அடுத்த கட்டம் என்ன?

வாழ்வில் சாதனைகள் பல படைத்து வெற்றியின் உச்சத்தை தொட பலருக்கு ஆசைதான். ஆனால் எத்தனை பேருக்கு சவாலையும், தடைகளையும் தொடர் தோல்விகளையும் தாண்டி வெற்றி பெற முடியும். ஒரு வழி மூடப்பட்டால் வேறு வழியா இல்லை இவ்வுலகில்.

- வாருங்கள் விடாமுயற்சியால் உங்களுடைய வாழ்க்கையை சாதனையாக மாற்றக்கூடிய சந்தர்ப்பத்தினை தருகின்றோம்.
- மேலதிக தகவல்களுக்கு : 076 678 1042 (7738)



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536 (C-5665)

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.